ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

| | | |
|---|---|---|
| சிலம்பு ௬ | மெய்கண்டான்யாண்டு-௭௱அ மாசித்திங்கள் 1931ஆ பிப்ரவரிமீ—மார்ச்சுமீ | பரல் ௨ |

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### திருக்குறுந்தொகை

"பந்தித்த பாவங்க ளம்மையிற் செய்தன இம்மை வந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்ப தென் னேவந் தமரர் முன்னாள்
முந்திச் செழுமல ரிட்டு முடிதாழ்த் தடிவணங்கும்
நந்திக்கு முந்துற ஆட்செய்கி லாவிட்ட நன்னெஞ்சமே".

அமரர்=தேவர்கள்

முன்னாள்=முற்காலத்தில்

செழுமலரிட்டு=வளம் பொருந்திய பூக்களைச் சாத்தி

முடிதாழ்த்து=தங்கள் முடியோடு கூடிய தலைகளைக் கீழே வளைத்து நின்று

அடி வணங்கும்=இரண்டு அடிகளையும் வணங்குகின்ற

நந்திக்கு=சிவபெருமானுக்கு

முந்துற=(வினை வந்து சந்தித்தற்கு) முன்பு

ஆட்செய்கிலாவிட்ட=அடிமை செய்யாது வாளா இருந்த

நல் நெஞ்சமே=தீய நெஞ்சே

அம்மையிற் செய்தன=முற்பிறப்பிற் செய்தவைகளான

பந்தித்த பாவங்கள்=உன்னைக் கட்டிநின்ற பாவங்கள்

இம்மை வந்து சந்தித்த பின்பு=இந்தப் பிறப்பிலே வந்து சேர்ந்த பிற்பாடு

சமழ்ப்பது=வருந்துதலினால்

என்ன=என்ன பயன் உண்டாகும்? (அதாவது யாதொரு பயனுமில்லை)

முடி என்பது தலையில் அணிந்திருக்கிற கிரீடம்; அஃது இங்கே முடி அணிந்திருக்கிற தலையைக் குறித்து நிற்கிறது.

தாழ்த்து—செய்து என வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

நல் நெஞ்சம்=இகழ்ச்சியாகத் தீய நெஞ்சம் நல்ல நெஞ்சம் எனக் கூறப்பட்டது. இது வஞ்சப் புகழ்ச்சி.

சமழ்ப்பது=தொழிற் பெயர்.

து—தொழிற் பெயர் விகுதி

இத் தேவாரப் பாட்டில் முற்பிறவிகளிற் செய்த தீவினைகள், புத்தி தத்துவம் பற்றுக் கோடாய்க் கிடந்து பாவங்களாய் மாறி இப்பிறப்பிலே அத்தீவினைகள் செய்தவரைத் துன்பமாய் வந்து பொருந்துதல் தவறாதென்பதும், அத்தீவினைகள் துன்பமாய் வருதலைத் தவிர்க்க வேண்டுமானால் அவைகள் வந்து சேருங் காலத்துக்கு முன்பே சிவபெருமானை அவனுடைய அடிகளில் மலர்கள் சாத்தித் துதித்தல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன. ஒருவன் வினைக்கு அடிமையாதலைத் தவிர்க்க விரும்பினால் தன்முனைப்பு நீங்கிச் சிவபெருமானுக்கு அடிமையாதல் வேண்டும் என்பது இப்பாட்டின் கருத்து. இதே கருத்து அடிகள் வேறொரு தேவாரப் பாவில்

அல்ல லென்செய்யும் அருவினை யென்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லையில்லதோரடிமை பூண்டேனுக்கே

எனக் கூறியிருத்தல் காண்க.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

# இராமாயணம்

[திரு. தி. த. கனககந்தரம் பிள்ளை B. A. அவர்கள்.]

இராமாயணம் என்னும் இவ்விதிகாசம் வான்மீகியாரால் இயற்றப்பட்டது. இதன் உத்தர காண்டத்தில் ஐம்பத்தேழாவது சருக்கத்திற் கூறியபடி வான்மீகியாருடைய ஆச்சிரமம் கங்கையின் தென்கரைக்கண்ணதாகலானும், முதற்காண்டமாகிய பாலகாண்டத்து ஐந்தாஞ் சருக்கத்திற் கூறியபடி இது கோசல நாட்டை அரசுசெய்த இக்ஷ்வாகு குலத்தார் சரித்திரமாகலானும் இது பிறந்த இடம் கோசலநா டென்பது பெறப்படும். கோசலநாட்டில் வாழ்ந்த சூதர்களிடத்தில் இக்ஷ்வாகு குலத் தரசருட் சிறந்த இராமனுடைய வலியையும் கொற்றத்தையுங் கூறுஞ் சிற்றிதிகாசங்கள் பல எழுதாக்கேள்வியாய் வழங்கி வந்தனவாக, அவைகளை ஆதாரமாகக்கொண்டே வான்மீகியார் இதனைச் செய்தார் என்று கொள்ளப் படுகின்றது. கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதம் செய்ததுபோலச் சிற்றிதிகாசங்கள் பலவற்றை ஒன்று சேர்த்து ஒரு பெரு நூலாக யாக்காது வால்மீகியார் அக்காலத்து வழங்கிவந்த சில சிற்றிதிகாசங்களிலுள்ள கதையை மாத்திர மெடுத்துக்கொண்டு அதை யமைத்துத் தாமொரு நூலியற்றினு ரென்க. மகாபாரதத்தைப்போலவே இராமாயணமும் முதலில் எழுதாக்கேள்வியாய்ப் பயின்று வந்தது. நூல்களை நெட்டுருப்பண்ணி அவைக்களங்களிற் பாடுவதே தந்தொழிலாகவுடைய குசீலவர்கள் அதனைக் கற்றுக் கொண்டு தாஞ் செல்லுந் தேசங்கடோறுமுள்ள ராஜ சபைகளிலும் மற்று மிடங்களிலும் எடுத்தோதி வந்தார்கள். இந்தக் குசீலவர்களையே பிற்காலத்தார் இராமன் புத்திரர்களாகிய குசலவர்களாக்கிவிட்டார்கள். காவிய இலக்கணங்களுக்கியைய முதன் முதற் செய்யப்பட்டமையின் இராமாயணம் ஆதிகாவியமெனப் பெயர் பெறும்.

இது வான்மீகனாற் செய்யப் பட்டபோது ஐந்து காண்டங்களையே உடைத்தாயிருந்தது. ஏழாவதாகிய உத்தரகாண்டம்

வெகு காலத்திற்குப் பின் இயற்றிச் சேர்க்கப்பட்ட தென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆறுங்காண்டத்தின் முடிவே முன்னர்க் காலத்தில் நூன் முழுமைக்கும் முடிவாயிருந்த தென்பது மிகத் தெளிவாய்த் தெரிகின்றது. முதலாவதாகிய பாலகாண்டத்துள்ள பல பாகங்கள் பின்வருங் காண்டங்களிலுள்ளவைகளோடு முரணுகின்றன. அதுவுமின்றி அதனிடத்து இரண்டு அநுக்கிரமணிகைகள் காணப்படுகின்றன. அவை முதற்சருக்கமும் மூன்றும் சருக்கமும். இவைகளிரண்டும் ஓரே காலத்தில் செய்யப்பட்டன வல்ல. முதற்சருக்கம் பாலகாண்டக் கதையையும் உத்தரகாண்டக் கதையையும் சங்கிரகித்துக் கூறுமையின், அஃது அவ்விரண்டு காண்டமும் வான்மீகர் இயற்றிய நூலோடு சேர்க்கப்படு முன்னர்ச் செய்யப்பட்ட தென்பது தேற்றம். அயோத்தியா காண்டத்தில் முதலில் நூலிற்குத் தொடக்கமாயிருந்த பாகம் அதினின்றும் பிரிக்கப்பட்டு இப்போது பாலகாண்டத்தில் முதலில் நூலிற்குத் தொடக்கமாயிருந்த பாகம் அதனினின்றும் பிரிக்கப்பட்டு; இப்போது பாலகாண்டத்தில் ஐந்தாஞ் சருக்கத்திற்குத் தொடக்கமா யிருக்கின்றது. இவைகளே அன்றி வான்மீகனாராற் செய்யப்பட்ட நடுவணைந்து காண்டங்களிலும் சில சருக்கங்களும் சுலோகங்களும் புதிதாகச் செய்து சேர்க்கப்பட்டுள்ளன. இவைகள் முன்னும் பின்னுமுள்ள சருக்கங்களோடும் ஒட்டப் பொருந்தாமையின் யாவரும் கண்டுணரற் கெளியவைகளாயிருக்கின்றன. இவைகளையெல்லாம் மேலைத் தேசத்துப் புலவராகிய * ஆசிரியர் ஜாக்கோபியார் மிக நுண்ணிதாக வாராய்ந்து நிரூபித்துள்ளார்.

இராமயணத்தில் இப்போதுள்ள சுலோகத்தொகை இருபத்து நாலாயிரம். உத்தரகாண்டத்தில் நூலினளவு கூறுமிடத்து இராமாயணம் ஆறு காண்டத்தோடு ஒருத்தர காண்டமுமுடைத்தென்பதும் ஐஞ்ஞூறு சருக்கமும் இருபத்துநாலாயிரஞ் சுலோகமுங் கொண்ட தென்பதும் சொல்லப்பட்டுள. இதனால் உத்தரகாண்டம் சேர்க்கப்பட்டது இராமாயணம் பலவாறு வளர்ந்து இப்போதுள்ள அளவினதாயபோதென்பது

---

* Prof Jacobi.

செவ்வனே புலப்படும். மகாபாரதத்திற்குரைத்தது போலவே இராமாயணம் ஆதியில் இத்தனை சுலோகங்கள் கொண்டதாயிருந்ததென்று கூறமுடியாது. அக்கணக்கு நூலின் எவ்விடத்தும் சொல்லி இல்லை. மகாபாரதத்தைப்போலவே இராமாயணமும் காலஞ் செல்லச் செல்ல வளர்ந்து கொண்டு வந்தது. புதிய உபாக்கியானங்களும் கதைகளும் வேண்டிய வேண்டியாங்குச் சேர்க்கப்பட்டு மகாபாரதம் வளர்ந்தது; இராமாயணம் அங்ஙனமின்றி ஓரிடத்திற்கூறிய கதைகளையும் காட்சிகளையுமே பெயர்த்தும் பெயர்த்தும் இரண்டு மூன்றிடத்திற் கூறுவதனாலும் வருணிப்பதனாலும் வளர்ச்சியடைந்தது. இராமனுடைய குணங்களின் மேன்மையையும் சீதையினுடைய கற்பின் மிகுதியையும் மீட்டும் மீட்டும் புகழ்வதற்காகப் பல சுலோகங்களும் சருக்கங்களும் புதிதாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன. இராமனைக் காட்டிற் கனுப்பிவிட்டுத் தசரதனடைந்த துன்பமும், அவனைப் பிரிந்து தாயாகிய கோசலை பட்ட வருத்தமும் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களால் அனேக புதுச் சுலோகங்களில் வருணிக்கப்பட் டுள்ளன. அவ்வாறே இராமனுடைய தம்பிமார்களது அன்பும் ஆண்மையும், முனிவர்களது தவத்தின் பெருமையும், அவர்கள் வாசஞ்செய்த இடத்தின் சிறப்பும் எத்தனையோ முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இராமாயணஞ் செய்துள்ளது சுலோகத்தால். அதுவே சம்ஸ்கிருதப் பாக்களி லெல்லாம் செய்ய எளிதானது. அதனால் அது புலவர்களுக்கு வேண்டியபடி புதுச்சுலோகங்களையுஞ் சருக்கங்களையும் செய்து சேர்க்க இடங்கொடுத்தது. அதனாலேயே ஒரு சருக்கத்தில் நன்றாக விரித்துரைத்துள்ள சம்பவங்கள் அதனையடுத்துத் தொடர்ந்து வரும் இரண்டு மூன்று சருக்கங்களில் மீட்டும் மீட்டும் கூறப்பட்டுள்ளன. இச் சொருகுகவிகளால் நூல் அழகு கெட்டதொன்றன்றி ஒருமுறை கூறியதனையே மறித்தும் கூறுவதனாற் கதையினிமையும் பாழ்பட்டுக் கிடக்கின்றது.

இனி இராமாயணம் தோன்றிய காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். மகாபாரதத்தின்கணுள்ள உண்மையான இதிகா

சப் பாகங்கள் ஒன்று சேர்த்து ஒரு வழிப்படுத்தப் படுமுன்னம் இராமாயணத்தில் வான்மீகனாரால் இயற்றப்பட்ட பாகங்கள் தோன்றியிருக்க வேண்டுமென்பது புலப்படுகின்றது. இராமாயணத்திற் பாரத வீரர்களின் கதைகள் சொல்லப்படாதிருக்க, மகாபாரதத்திற் பலவிடங்களில் இராமனுடைய சரித்திரம் குறிக்கப்பட்டுளது. அன்றியும் மகாபாரதத்திற் கர்ண பருவத்தில் இராமாயணத்து யுத்தகாண்டத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்தாளப்பட்டுளது. இவைகளினால் வான்மீகியாரியற்றிய ஆதிகாவியம் மகாபாரதம் யாக்கப்படுகின்ற காலத்தில் ஒரு பழ நூலாக வழங்கிவந்திருக்க வேண்டுமென்பது தேற்றம். மகாபாரதத்தில் வனபருவத்திற் கூறப்பட்டுள்ள ராமோபாக்கியானத்திற்கு முதனூல் வான்மீகி ராமாயணமே போலும். அதன் சுலோகங்கள் சில வான்மீகியின் சுலோகங்களோடொத்திருக்கின்றன. அதனை இயற்றினவரும் அதனைக் கேட்பவர்கள் இராமாயண மறிந்தவர்களா யிருப்பார்கள் என்ற எண்ணத்தோடேயே இயற்றினவராய்த் தோன்றுகின்றனர்.

புத்த சமயநூல்களுள் ஒன்றாகிய புத்த ஜாதகக்கதையில் தசரத ஜாதகத்தில் இராமனுடைய கதை கூறப்பட்டுளது. இதிற் கூறப்பட்ட கதை இராமனுடைய வனவாசத்தோடு முடிகின்றமையின் தசரத ஜாதகம் இராமாயணத்திற்கு முற்பட்டதென்பது தோன்றும். ஆயினும் தசரத ஜாதகத்தில் அதை யியற்றினவருக்கு இராமன் இலங்கைக்குச் சென்றதும் தெரிந்திருக்க வேண்டு மென்பதற்குச் சிலகுறிகள் காணப்படுகின்றமையானும் இராமாயணத்து யுத்தகாண்டத்தில் உள்ள சுலோகம் ஒன்று அதில் உரை நடையிற்சேர்த்து எழுதப்பட்டுண்மையானும் இராமாயணம் தசரத ஜாதகத்திற்கு முற்பட்டதென்று இப்போது கொள்ளப்படுகின்றது. புத்தனைப்பற்றி இராமாயணத்தில் ஓரிடத்திலேயே குறிக்கப் பட்டுளது. அது பிற்காலத்திற் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகத்திலாதலின் மேற்கூறிய கொள்கைக்குச் சிறிதும் முரணாகாது.

இராமாயண நூலுடையார்க்குக் கிறிஸ்து பிறக்க முன்னூறு வருஷங்களுக்குமுன் இந்தியாவிற்குவந்த கிரேக்கர்களைத்

தெரியுமோ வென்பதும் இராமாயணத்தின் கால நிர்ணயத்திற்கு ஒருதவியாகும். கிரேக்கர்களாகிய யவனர்களைப்பற்றி இராமாயணத்தில் இரண்டிடத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது. அது பாலகாண்டத்திலும் கிஷ்கிந்தா காண்டத்திலுமாம். இவைவிரண்டும் பிற்காலத்திற் புதியனவாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகங்கள் என்று மேற்கூறிய ஆசிரியர் ஜாக்கோபியார் காட்டியிருக்கின்றனர். ஆகவே இது வான்மீகியார் இயற்றிய இராமாயணத்தில் இப்பாகங்கள் சேர்க்கப்பட்டது இந்தியாவிற்குக் கிரேக்கர்கள் வந்ததன் பின் என்பதையே காட்டும்.

இராமாயணத்தில் இந்தியாவின் கீழ்பாகத்தில் இருந்தனவாகக் கூறப்படும் இராச்சியங்களும் அதன் கால நிர்ணயத்திற் கோராதாரமாகும். இராமாயணத்திற் பாடலிபுத்திர நகரத்தைப் பற்றிச் சொல்லப்படவே இல்லை. அது கிறிஸ்து பிறக்க முந்நூற்றெண்பது வருஷங்களுக்குமுன் வைசாலி நகரத்தில் இரண்டாம் புத்த சங்கம் இரீஇய காலாசோக அரசனால் உண்டாக்கப்பட்டது. கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வந்தபோது அஃது இந்தியாவிற்குத் தலைநகரமாயிருந்தது. பாலகாண்டத்தில் முப்பத்தைந்தாஞ் சருக்கத்திற் பாடலிபுத்திர நகரம் இருந்த இடத்தின் வழியாக இராமர் போனதாகக் கூறப்பட்டுளது. முப்பத்திரண்டாம் முப்பத்து மூன்றாம் சருக்கங்களிற் பாலகாண்டத்தை இயற்றினவர் இராமாயணத்தின் பெயர் எவ்வளவு தூரம் பரவியிருந்த தென்பதைக் காட்டுதற்குப்போலும், இந்தியாவின் கீழ்பாகத்திருந்த கௌசாம்பி, கன்யா குப்ஜம், காம்பிலி ஆதியாம் பல நகரகங்களின் தோற்ற வரலாறுகளை எடுத்துக் கூறியிருக்கின்றனர். அந்தக்காலத்திற் பாடலிபுத்திரம் இருந்திருக்குமாயின் அது தோன்றிய வரலாற்றையும் அவர் கூறாது விடார்.

இராமாயணத்தில் வான்மீகியார் இயற்றிய பாகத்தில் வருமிடங்கடோறும் கோசல நாட்டிற்குத் தலைநகரம் 'அயோத்தியா' வென்றே கூறப்பட்டுளது. அதனைப் பௌத்தர்களும், சமணர்களும், கிரேக்கர்களும் பதஞ்சலியாரும் எவ்விடத்தும் சாகேதமென்றே கூறுகின்றனர். உத்தரகாண்டத்தில் இராமன் குமார

ளுகிய லவன் சிராவஸ்தி என்னும் நகரத்தைத் தனக்கு ராஜதானியாக்கிக் கொண்டான் என்று சொல்லப்பட்டுளது. புத்தனுடைய காலத்திற் கோசலநாட்டை அரசாண்ட பிரசேனஜித்து என்னும் அரசனும் சிராவஸ்தியிலிருந் தரசாண்டதாகவே தெரிகின்றது. இவைகளெல்லாம் பழைய அயோத்திநகரம் குடிஎழும்பாத முன்னும், அதுவே கோசலநாட்டிற்குத் தலை நகரமாய் இருந்தபோதும், அதற்குப் புதிதாய் வந்த சாகேதம் என்னும் பெயர் வழங்காததற்கு முன்னும் சிராவஸ்தி என்னும் நகரம் ராஜதானி ஆக்கப் படாததற்கு முன்னும் இராமாயணத்தின் பழம்பாகம் இயற்றப் பட்டதென்பதை நன்கு புலப்படுத்துகின்றன. அன்றியும் பாலகாண்டத்தில் மிதிலையும் விசாலையும் இரண்டு நகரங்களாகவும் வெவ்வேறரசர்களால் ஆளப்பட்டனவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளிரண்டும் புத்தர் காலத்தில் வைசாலி என்று பேர்பெற்ற ஒரு நகரமாகி ஓரரசின் கீழாகிவிட்டது.

(இதுகாறும் கூறியவாற்ருல் இந்தியாவிற் புத்த சமயம் தோன்றுவதற்கு முன்னரேயே வான்மீகியாரால் இராமாயணம் இயற்றப்பட்ட தென்பதும் புதிதாய்ச்செய்து சேர்க்கப்பட்டனவாகிய பாலகாண்டம் முதலிய சிலபாகங்களும் அக்காலத்திலேயே சேர்க்கப்பட்டு விட்டன வென்பதும் தெரிய வருகின்றன.) இதனினும் வரையறவாக இதைப்பற்றிச் சொல்லுதல் கூடாது.

(சில மாதங்களுக்குமுன் வான்மீக ராமாயணத்தைத் தமிழ் வசன நடையில் மொழிபெயர்த்து வெளியிட்ட பண்டிதர் நடேச சாஸ்திரியார் தமது முகவுரையில் "மகா பாரதம் உண்டாவதற்கு வெகு காலங்களுக்கு முன் இராமாயணம் தோன்றி எழுத்தில் ஏற்படுத்தப்படாமல் வேதம்போல் ஜனங்களுக்குள் அத்தியயன ரூபமாய் விளங்கி வந்ததென்றும், இராமாயணத்திற் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் மகாபாரதத்தி லிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் பழமையான விஷயங்கள் என்றும் தெரிகிறது" என்று கூறித் தமது கொள்கைக்கு ஏழுகாரணங்களும் எடுத்துக் காட்டியிருக்கிருர்.) இங்ஙனம் பண்டிதர் கொண்ட

கொள்கை நாம் மகாபாரத ராமாயணங்களைப்பற்றி எழுதியவற்றில் எடுத்துக்கூறிய கொள்கையோடு ஒற்றுமையுடைத்துப் போற்றுன்றினும் அஃது உண்மையில் அங்ஙன மன்றென்பதை இங்குச் சிறிதெடுத்துக் கூறுவாம்.

பண்டிதர் மகாபாரதத்திற்கு இராமாயணம் முந்தியதென்றும் முன்னையதிற்கூறும் விஷயங்களினும் பின்னதிற்கூறும் விஷயங்கள் பழமையானவை யென்றும் கொண்டிருக்கிறுர். பாண்டவர்களுடைய காலம் இராமனுடைய காலத்திற்குப் பிந்தியதென்பது அவர் கொள்கைபோலும். எமது கொள்கை அது வன்று; பாண்டவர்களுடைய காலம் முன் என்றும் இராமனுடைய காலம் பின் என்றும் நாம் கொள்கின்றோம். இந்தியாவிலுள்ள ஆரியர்கள் இமயமலைக்கு அப்புறத்திலிருந்து வெகுகாலத்திற்கு முன் இங்கேவந்து முதலிற் பஞ்சநதீ தீரங்களிற் குடியேறிப் பின்னர்க் கிழக்கிலும் தெற்கிலும் மற்றையிடங்களிலும் பரவினுர்கள் என்பது இப்போது வழக்காற்றிலுள்ள கொள்கை. இஃதுண்மையாயின் உத்தரத்திலுள்ள அஸ்திஞபுரத்தில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலம் அந்நகரத்திற்குத் தென்கிழக்கிலிருந்த அயோத்தியில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலத்திற்கு முற்பட்டதென்பது பெறப்படும். பாரதயுத்தம் நடந்த காலத்தில் ஆரியர்கள் பஞ்சநதீ தீரங்களைக் கடந்து கிழக்கிலும் தெற்கிலும் பரவி இராச்சியங்கள் ஏற்படுத்தினதாகக் காணப்படவில்லை. ஒருபெண் நாயகர்கள் பலரை மணத்தலாகிய அநேகபதி விவாகம் முதலிய மிகப்பழைய வழக்காறுகள் பாண்டவர் காலத்திருந்தமையின் பாரதயுத்தம் நடந்தகாலம் மிகவும் முற்பட்டதென்பது தேற்றம். இராமனுடைய காலத்தில் இவ்வகை வழக்காறுகள் இருந்தனவாகத் தெரியவில்லை. மகாபாரதத்தில் அனேக ராச்சியங்கள தக்ஷிணத்தில் இருந்தனவென்றும் யவனர் முதலிய ஜாதியார் அனேகர் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுளதே என்னின், இவைகளெல்லாம் பிற்காலத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களிற் காணப்படுகின்றனவே அன்றி ஆதியில் தோன்றிய பாகங்களில் அல்ல என்பது. மகாபாரதம் முதலில் எழுதாக்கேள்வியாயே பயின்று வந்ததென்

MADURAI UNIVERSITY LI

றும் அதில் விநாயகர் அதனைக் கொம்பினால் மேருமலையில் எழுதினர் என்றுங் கூறும் பாகம் பிற்காலத்துச் செய்து சேர்க்கப் பட்டதென்றும், அஃது எல்லாப் பிரதிகளிலும் காணப்படவில்லையென்றும் முன்னரே கூறியுள்ளோம். இவைகளினாற் பண்டிதர் தமது கொள்கைக் காதாரங்களாகக் காட்டும் காரணங்கள் ஏழும் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க.

---

# பண்டைத்தமிழ்ச் சொற்கள்

## ஒளி (கரு)

[திரு. M. V. நெல்லையப்பபிள்ளை அவர்கள், B. A.]

கடவுளைக் குறிக்கப் பண்டைத் தமிழர் வழங்கிவந்த சொற்களில் ஒளி என்னும் சொல் ஒன்று. ஒளி என்ற கருத்து மாந்தர்களுக்கு முதன்மையாய் ஞாயிற்றினுடைய ஒளியின் பழக்க அறிவாலுண்டாகின்றது. பண்டைத் தமிழர்கள் கடவுளை ஒளி என்று கூறக் காரணம் என்ன என்பதைப்பற்றி இக்கட்டுரையில் ஆராய்வாம்.

2. ஒளி என்ற சொல் ஒண்மை + இ என இரண்டு சொல்லா லாகியது. ஒண்மை என்னும் பண்புப்பெயரின் ஈற்றிலுள்ள “மை” விகுதி கெட்டு ஒண் என நின்று பின் முன்னின்ற மெய் ளகரமாய்த் திரிய, அதனுடன் வினை முதற்பொருள் விகுதி “இ” சேர்ந்து ஒளி என்று ஆகியது. ஒண்மை என்ற சொல்லின் முதற்பொருள் (primary meaning) விளக்கம் (brightness) ஆகும். வடமொழியில் அது பிரகாசம் என்றும் சோதி என்றும் கூறப்படும். சுடர், விளக்கு, ஒளி என்பன ஒரு பொருட்சொற்கள். ஒளி என்ற சொல் வழிப்பொருள்களில் (derived meaning) அறிவு, புகழ்,வெயில், மின்னல் முதலியவற்றைக் குறிக்கவும் தமிழ்நூலில் வழங்கப் படுகின்றது. இந்த முதற்பொருளாகிய விளக்கம் என்ற பொருளிலே ஒளி என்ற சொல் கடவுளுக்கு வழங்கப்படுதலைப் பற்றியே இங்கு

பேசப்படும். இந்தக்கருத்தில் எந்தப்பொருள் ஒளியைச்செய்யுமோ அந்தப்பொருள் ஒளியாகும். ஒருபொருள் தான் ஒளியாயிருந்தாலொழிய பிற பொருள்களை ஒளிசெய்தல் முடியாது. வேறொரு பொருளினது சார்பின்றித் தனி ஒளியாய் (சுயம்பிரகாசமாய்) விளங்குகிற பொருளும் பிற பொருள்களை ஒளிசெய்கிற பொருளும் கடவுளே யாகும்.

3. கடவுள் ஒளியைச்செய்கிற பொருள் என்றால் யாருக்கு அல்லது எதனுக்கு ஒளி செய்கிறான் என்ற கேள்வி பிறக்கும். கடவுள், உயிர், உயிரில் உலகம் என்ற மூன்று பொருள்களில் கடவுள் ஏனைய உயிர்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் ஒளியைச் செய்கின்றான் என்பதே அக்கேள்விக்கு விடையாகும்.

4. கடவுள் உயிர்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் ஒளியைச் செய்கின்றான் என்றால் ஒளி என்பது என்ன? அவன் உயிர்களுக்கு ஒளி செய்தற்குக் காரணம் என்ன? உயிர்களிடத்தில் ஒளி இல்லையா? ஒளியில்லையானால் அவைகளிடம் என்ன இருந்தது? இந்தக்கேள்விகள் கேட்கிறவர்களுடைய மனதிலுண்டாகும். நாம் அந்தக்கேள்விகளுக்கு விடை அளித்தாலொழியக் கடவுளை ஏன் பண்டைத் தமிழர்கள் ஒளி என்று கூறினார்கள் என்பது நமக்கு நன்கு விளங்காது.

5. ஒளி என்னும் கருத்து நான் முன்னேகூறியபடி நமக்கு ஞாயிற்றின் ஒளிப்பழக்கத்தால் உண்டாகின்றது. ஞாயிற்றின் ஒளி மாந்தர்களாகிய நமக்குப் புறமே உள்ள ஒளி. அது பகற்காலத்தில் வானில் (ஆகாயத்தில்) எங்கும் விளங்குகின்றது. இரவுக்காலத்தில் அவ்வொளி ஞாயிற்றில் ஒடுங்குகிறது. ஞாயிறு காலையில் கிழக்கே தோன்றியதும் இரவிலுள்ள வெளி இருள் நீங்குகின்றது. இருள் நீங்கின பகற்காலங்களில் மாந்தர் தங்களுடைய பல கருமங்களையும் உலகிலே செய்கிறார்கள். அந்த ஞாயிற்றின் ஒளியின் துணையில்லாமல் அவர்கள் உலகில் ஒரு கருமத்தையும் செய்ய முடியாது. ஞாயிற்றினொளி நீங்கின இரவில் அவர்கள் யாதாவதொரு கருமஞ் செய்ய வேண்டுமானால் திங்களினொளியை அல்லது விண்மீன்களினொளியை அல்லது

பலவகை விளக்குகளினொளிகளில் ஒன்றைத் துணையாகக் கொண்டுசெய்கிறார்கள். கடவுளுடைய அருள் ஒளியாலே நாயிறு திங்கள் முதலியவை விளங்குகின்றன. ஆகவே எந்த ஒளியாயிருந்தாலும் இருள் நீக்கத்துக்கு ஒளி இன்றியமையாது வேண்டப்படுவதாகின்றது.

6. மேலே கூறிய நாயிற்றினொளி முதலிய ஒளிகள் எல்லாம் புற ஒளிகள். கடவுள் உயிர்களுக்கு ஒளியைச் செய்கின்றான் என்ற வசனத்தில் அடங்கியுள்ள ஒளி இந்தப்புற ஒளிகளில் ஒன்றல்ல. நாம் அந்த ஒளி எத்தன்மையதென்று நமது அனுபவத்தை ஒட்டி அறிந்து கொள்ளுதற்கு, அதற்கு நாயிற்றொளியை உவமையாக நாம் கூறுகிறோம். கடவுளினது ஒளி அக ஒளி. ஒளியே அவனுடைய உருவம். இந்த ஒளி கடவுளுக்கு நாயிற்றின் ஒளிபோல அவனைவிட்டு நீங்காதது. அவனினின்றும் வேறாகாதது. இதுவே தத்துவங்களுக் கெல்லாம் மேலே அறிவு வெளியில் (ஞான ஆகாசத்தில்) விளங்கும் அருள் ஒளியாகும். எத்தனைகோடி நாயிறுகளின் ஒளிகள் ஒன்று சேர்ந்து விளங்கினாலும் கடவுளின் அருளொளிக்கு ஈடாகாது. நாயிற்றினொளியானது உலகிலுள்ள புற இருளை நீக்குதல்போல கடவுளுடைய அருள் ஒளியானது உயிர்களிடத்தில் அநாதியே சேர்ந்துள்ள ஆணவமலத்தை நீக்கி அறிவை விளங்கச் செய்கிறது. உயிர்களிடத்தில் ஆணவமல மிருத்தலினாலேயே கடவுளுடைய அருள் ஒளி அவர்களிடத்தில் விளங்கி ஒளி செய்தற்குக் காரணம் உண்டாயிற்று. இந்த அருள் ஒளியானது எங்கும் நிறைந்துள்ள பேரொளியா யிருத்தலினால் ஆணவமல இருளில் மூழ்கியுள்ள உயிர்கள் தொடக்கத்திலே அந்தப் பேரொளியை அடைதல் முடியாது. ஆதலின் அந்தப் பேரொளி மாயா காரியங்களாகிய பலவகை நுண்மை பருமைகளையுடைய தத்துவங்களின் வழியாய்க் குறைந்து குறைந்து உயிரில்உலகில் விளங்குகிறது. ஆகவே உயிர்களுக்காகக் கடவுளது அருள் ஒளி உயிரில்லாத உலகத்திலும் விளங்குகின்றது. இந்தப் பேரொளி பலவகை மாயா தத்துவங்களோடு கூடிய உலகில் குறைந்து விளங்கும் பொழுது உயிர்கள் தொடர்புபட்டமட்டும் (சம்பந்தப்பட்

டமட்டும்) ஆணவமலமும் அதனுடன் விளங்குகின்றது. கடவுளது அருள் ஒளிக்கும் ஆணவமல இருளுக்கும் ஒன்றே இடமாயிருத்தலால் உலகமானது அறிவு அறியாமை, துன்பம் இன்பம், பேறு இழவு, நன்மை தீமை முதலிய பல முரணிரட்டைகளாய் (pairs of opposites) அமைந்திருக்கின்றன. உயிர்கள் இந்த முரணிரட்டைகளாகிய வாலாமை (அசுத்தம்) யிலிருந்து நீங்கித் தூய்மை அடைந்து தனிப்பேரொளியை நேரே அடைதற்குத் தகுதியுடையவைகளாய் வீடுபேறு அடைகின்றன. சுருக்கத்தில், சார்ந்தவண்ணம் ஆகும் இயற்கை உடைய உயிர்கள் கடவுளது அருளொளியைச் சார்ந்தாலன்றி, புலனறிவு ஆராய்ச்சி அறிவுகளாக மாந்தர்களிடம் விளங்குகிற ஒருபுடை விளக்க அறிவாவது தனி அருள் அறிவு ஆகிய மெய்யுணர்வாவது அடைதல் முடியாது. இக்கருத்துக்களே ஒளியைப் பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள்.

7. மேலே கூறிய வண்ணம் கடவுள் உயிர்களுடைய ஆணவமல நீக்கத்தின்பொருட்டு அவைகளுக்கு முதலாவது உலகிலுள்ள தத்துவங்களின் வழியாய்த் தன்னினின்றும் நீங்காதஅருட்பேரொளியைக் குறைத்து விளங்கச் செய்தும் உயிர்கள் பக்குவமடைந்த பின் அவைகளிடத்தில் நேராய் அவ்வொளியை முற்றிலும் விளங்கச் செய்தும் வீடு பேறு அடைவிக்கின்றான். இவ்வாறு கடவுளது அருட்பேரொளி முற்றிலும் விளங்கப் பெற்றவர்களே சைவசமய குரவர்களாகிய நான்கு பெரியோர்களும். அவர்கள் தன்முனைப்புச் சிறிது மின்றிச் சிவபெருமானாகிய கடவுள் அருட்பே ரொளியில் விளங்குகிறவர்கள். அவர்கள் தங்கள் உள்ளத்தில் சிவனாய் நிற்கிற அருட்பேரொளி உருவினைக் கண்டு உணர்ந்தவர்கள். "நன்றானம் மனம் வைத்திடுஞானமாம் — ஒன்றானைக்கண்டு கொண்ட தென்னுள்ளமே" என்றும் "சிந்தையுட் சிவனாய் நின்ற—உருவனைக்கண்டு கொண்ட தென்னுள்ளமே" என்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியிருத்தல் காண்க. கடவுளினது அருட்பேரொளியில் உண்மை அறிவு விளங்கப்பெற்ற இத்தகைய பெரியார்கள் தங்கள் வாயினாற் கடவுளைத் துதிக்கும் கருத்துக்கள் அவர்களது உள்ளத்திலிருந்து

இயல்பாகவே பொங்கித் ததும்பி எழுகின்ற அனுபவ உண்மைக் கருத்துக்களாகவே யிருக்கும். ஆதலின் அவர்கள் தங்களுடைய உள்ளத்தில் அருள் ஒளியாகிய பேரறிவு முற்றிலும் விளங்கச் செய்த கடவுளை 'ஒளி' என்று கூறினார்கள்.

8. மூவரும் தங்கள் பாடல்களில் பல இடங்களில் கடவுளை ஒளி என்றும் அதே பொருளைத்தரும் 'சுடர்' 'விளக்கு' 'சோதி' என்றும் கூறியிருக்கிறார்கள். இவ்விரண்டு இடங்கள் மாத்திரம் இங்கே காட்டப்படும் திருஞான சம்பந்தசுவாமிகள் திருப்பிரமபுரம் 6-வது பாட்டில் "ஒளி திகழுருவஞ் சேரொருவர்" என்றும், திருப்புள்ளமங்கைப்பதிகம் 6-வது பாட்டில் "இளநாயிறின் சோதியன்றான்" எனறும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தூங்கானைமாடப்பதிகம் முதலாவது பாட்டில், "திருத்தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே" என்றும் திருமழபாடித் திருத்தாண்டகம் 10-வது பாட்டில் "ஒருசுடரா யுலகேழுமா முளகண்டாய்" என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்காளத்திப் பதிகம் 1-வது பாட்டில் "செழுஞ் சுடரே" என்றும், 9-வது பாட்டில் "திருக்காளத்தியுள் ளிருந்த ஒளியே" என்றும் பாடியிருக்கின்றார்கள்.

9. மாணிக்கவாசக சுவாமிகள் "சுடரே," "சூழொளி விளக்கே," "உள்ளத்து ளொளிர்கின்ற ஒளியே;" "கொழுஞ் சுடர்க் குன்றே," "என்னுளெழுபரஞ்சோதியே," "காண்பரிய பேரொளியே," "மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே," "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே," "தேசனே" "கேழிப்பரஞ்சோதி" முதலிய சொற்களாலும் சொற்றொடர்களாலும் பலபாட்டுகளில் கடவுளைத் துதித்துக் கூறியிருக்கின்றார்.

10. இன்னும் திருக்கோவையார், திருவிசைப்பா, பதினோராந் திருமுறை நூல்கள், பெரிய புராணம் முதலிய அருட்டிருமறை நூல்களிலும் பின்னே தோன்றியுள்ள தாயுமானசுவாமிகள், குமரகுருபர சுவாமிகள் முதலிய அருளாளர்கள் நூல்களிலும் கடவுள் 'ஒளி' 'சுடர்' 'சோதி' 'விளக்கு' என்ற சொற்

களாற் பல இடங்களிற் துதிக்கப்பட்டிருத்தலை நாம் காணலாம். ஆனால், அருளாளர்களல்லாத் தமிழ்ப்புலவர்கள் பாட்டில் அத் தன்மையவான சொற்களையும் சொற்றொடர்களையும் நாம் காணுதல் அரிதாகும்.

**11.** கடவுள் அறிவாகிய ஒளிவடிவினன் என்பது அவனுடைய உண்மை இலக்கணம் (சொரூப இலக்கணம்) ஆகும். அவனை உமை ஒரு பாகன் ஆகவும் நான்கு முகம் மூன்று கண்கள் முதலிய உறுப்புக்களையும் சூலம் மழு முதலிய படைகளையும் உடையவனாகவும் கூறுதல் அவனுடைய பொது இலக்கணம் (தடத்த இலக்கணம்) ஆகும். "அருவு முருவும் அறிஞர்க் கறிவாமுருவு முடையானுளன்" என்பது திருவருட்பயன்.

**12.** ஒளி, சுடர், விளக்கு முதலிய தமிழ்ச்சொற்களையும் சோதி தேசு என்ற வடமொழிச் சொற்களையும் பண்டைத்தமிழ்ப் பெரியோர்கள் கடவுளைக்குறிக்க வழங்கி வந்தமையால் அவர்கள் அல்லாமல் அவர்கள் தமிழ்த்திருமறைகளைப் பாடின காலத்தில் இருந்த தமிழ்நாட்டு மக்களும் சைவசித்தாந்த உண்மைகளை அறிந்த சைவசமயிகள் என்று நாம் ஊகித்து அறியலாம். கடவுள் தன்னினின்றும் வேறாகாத அருளால் உலகத்தை உயிர்களுடைய மல நோய்த்தீர்வுக்காகப் படைத்துக் காத்து அழித்தும் உயிர்களை மறைத்தும் நேரே அருள் செய்தும் வருகின்றான் என்னும் உண்மையானது சைவசமயத்திற்குச் சிறப்பாக உரியது. ஐக்கியவாத சைவர் நீங்கலாகப்பலவகைச் சைவர்கள் தவிர உலகிலுள்ள ஏனைச்சமயத்தவர்கள் ஆணவமல உண்மையைக் கூறுவதில்லை. ஆணவமலம் இருள்போல்வது என்றும் அருள் ஒளிபோல்வதென்றும் ஒளியும் இருளும் எதிரிடைப் பொருள்கள்போல அருளும் ஆணவமலமும் எதிரிடைப் பொருள்கள் என்றுங் கூறுவது சைவசமயமே. வேதாந்திகள் என்று கூறப்படுகின்ற ஏகான்மவாதிகள் இருள் என்று தனியே ஒரு பொருளில்லை என்றும், ஒளியின்மையே இருள் ஆதல்போல அறிவு இன்மையே அறியாமை என்று கூறுகிறார்கள். அக் கூற்று இக்காலத்து மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சி உண்மைக்குப் பொருந்தாததாகும்.

# நால்வர்களும் கல்வெட்டுகளும்

## II. அப்பர் சுவாமிகள்

[திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் இயற்றியது.]

(௧௩-ம் பக்கத் தொடர்ச்சி)

(C) நாயனர் மடங்கள் : அவைகள் ஏற்பட்ட காலமும் தானம் முதலியவைகளும்.

1. திருச்சி ஜில்லா திருப்பராய்த்துறை ஆதிமூலேசுவரர் ஆலயத்து முன்மண்டபத்துச் சுவர். கி. பி. 1007 - இராஜகேசரிவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜதேவன் I—22-ம் ஆண்டு. அந்த ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பெற்ற திருநாவுக்கரைசு தேவன் மடத்தில் மாகேசுரர்களுக்கு அன்ன தானம் செய்ய நிலதானம் செய்தது. (திருச்சி 644.)

2. தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலூக்கா திருவீழிமிழலை-வீழிநாதஸ்வாமி ஆலயம் முதல் பிரகாரத்து வடச்சுவர். கி. பி. 1017-திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜேந்திர சோழதேவன்-2-ம் ஆண்டு. இப்பெயருள்ள அரசர்கள் மூவர் இருந்தார்கள். இதர பிரிதுகள் சொல்லப்படாமையினல் முதல் இராஜேந்திரனை எடுத்துக்கொள்ளப்பட்டது. இச்சாசனத்தில் திருவீழிமிழலையில் திருநாவுக்கரசு மடத்துக்குச் சொந்தமான நிலங்களின் அட்டவணை குறிக்கப்பட்டிருக்கிறது. (தஞ். 843.)

3. தென் ஆறுகாடு, கூடலூர் தாலூக்கா திரு அதிகை வீரட்டானேசுரர் ஆலயத்து முதல் பிரகாரத்து தென்சுவர். கி. பி. 1114 - இராஜகேசரிவர்மன், திரிபுவனச் சக்கிரவர்த்தி, குலோத்துங்கச் சோழன் I–44-ம் ஆண்டு. வாகீசர் மடத்திற்கு நிலதானம் செய்தது. (தென்ஆறு 311.)

4. செங்கல்பட்டு ஜில்லா, சைதாப்பேட்டை தாலூக்கா வேளச்சேரி, தண்டீசுர சுவாமி ஆலயத்து கர்ப்பக் கிரகத்தின் வடச்சுவர். கி. பி. 1203 - திரிபுவனச் சக்கிரவர்த்தி குலோத்

துங்கச் சோழ தேவன் III ஜயங்கொண்டசோழ மண்டலத்து உட்பிரிவான குலோத்துங்கச்சோழ வளநாட்டுத் திருவான்மி யூரில் திருநாவுக்கரசு மடத்திற்குச் சேதிராய தேவனால் பூதானம் செய்தது. அவ்விதம் செய்த நிலமானது வேளச்சேரி என்னும் ஜினசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் இருந்ததா கக் கண்டிருக்கிறது. (செங். 1131.)

5. தஞ்சை ஜில்லா மாயவரம் தாலூக்கா, குறுக்கைவீரட் டானேசுவரர் ஆலயத்து முன்மண்டபத்துத் தென் சுவர். கி. பி. 1207. திரிபுவனச் சக்கிரவர்த்தி குலோத்துங்கன் III-29 ம் ஆண்டு. விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டில் குறுக்கை என்ற விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலத்தில் திருப் பள்ளியறை வேலையாட்களுக்கு ஊதியத்திற்கும் திருநாவுக்கரசு திருக்குகை கட்டுவதற்கும் அக்குகைக்கு வரும் அபூர்விகளுக்கு உணவளிக்கவும், திருவைகாசித் திருநாள் உற்சவத்திற்கு வரும் மாகேசுரர்களுக்கு உணவளிக்கவும், நெல் தானம் செய்தது. மேலும், இவ்வாலயத்தில் திருத்தாண்டகம் ஓதும் செய்தியை யும் குறிக்கிறது. (தஞ். 219/17)

6. மதுரை ஜில்லா மேலூர் தாலூக்கா பூதக்குடி. தேதி யும் அரசன் பெயரும் கிடைக்கவில்லை. இது அப்பர் சத்திரத் தில் இருக்கும் ஒரு தாமிரசாசனம். இவ்வூரில் ஒரு மடம் இருந் ததை இது தெரிவிக்கிறது. (மதுரை. 1413)

மேலே சொன்ன கல்வெட்டு முதலியவைகளிலிருந்து கி.பி. 1007-ம் (இராஜராஜன் காலம்) ஆண்டிலிருந்தே அப்பர் மடங் கள் தாபிக்கப்பெற்று வந்தனவென்று தெரிகிறது. அம்மடங் களுக்கு அரசர்களும் பிரபுக்களும் நிலதானங்கள் செய்து வந்த னர் என்றும் அங்கே சிவனடியார்களுக்கு உணவு அளிக்கப்பட் டது என்றும் அறியக் கிடக்கின்றன.

மேலும் அப்பர் மடங்கள்.

1. திருப்பராய்த்துறை
2. திருவீழிமிழலை

3. திரு அதிகை
4. திருவான்மியூர்
5. திருக்குறுக்கை
6. பூதக்குடி

என்ற ஆறு இடங்களில் இருந்தன. அவைகளில் முதல் ஐந்தும் 11, 12 நூற்றாண்டுகளிலேயே ஏற்பட்டன. ஆகவே அவைகள் மிகப் பழமையானவைகள். தற்போது அவைகள் எந்த நிலைமையில் இருக்கின்றனவோ தெரியக்கூடவில்லை. மடத்திற்குத் திருக்குகை என்றபெயர் இருந்ததாகத் தெரிகிறது. 12-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் திருமடங்கள் ஏன் குறிக்கப்பெறவில்லை என்பதன் காரணம் விளங்கவில்லை. அப்பர் சரிதத்தில் சொல்லப்பட்டிருக்கும் அப்பூதியடிகளின் திங்களூர் மடம் என்ன ஆயிற்றோ, ஏன் குறிக்கப்படவில்லையோ தெரியக்கூடவில்லை. பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள்

> "தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரானார் அருள் பெற்றுத்
> திங்களும் ஞாயிறுந்தோயும் திருமடமாங் கொன்று செய்தார்"

என்று அப்பர் சுவாமிகள் கட்டியருளின திருமடம் ஒன்றைக் குறிக்கிறார்கள். அம்மடத்தின் ஒரு பகுதி இப்போதும் உள்ளது. இதைப்போல பல மடங்களின் பெயர்கள் குறிக்கப்படாமல் இருந்திருக்கலாம். தான விஷயங்களைப்பற்றி கற்களில் எழுதி வைக்காவிட்டால் நமக்கு எவ்விதம் தெரியும்?

மேலே 4-வதாகச் சொல்லியிருக்கும் வேளச்சேரியானது முற்காலத்தில் ஜினசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயருடன் விளங்கிற்று. அதனாலே அந்த ஊரில் முற்காலத்தில் சமணர்கள் பிரபலம் அடைந்திருக்க வேண்டும். அந்த ஊர் நிலத்தை அப்பர் திருமடத்திற்குத் தானம் செய்யப் பெற்றதால் அக்காலத்திற்கு முந்தியே சமணம் அழிந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

(d) நாயனார் பெயர்களை இட்டுக்கொள்வது

1. திருநாவுக்கரசு தேவன் : கி. பி. 1025—திரிபுவன சக்

கிரவர்த்தி இராஜேந்திர சோழதேவன் - 12-ம் ஆண்டு. திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூக்கா காமரசவல்லி கிராமம் கார்க்கோடக ஈசுவரர் ஆலயத்தில் சண்டிகேசுரர் சந்நிதானத்தின் சுவர்களில் உள்ள கல்வெட்டு. அந்த ஆலயம் வழிபடுவோனான ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்துக் குடியான குன்றங்கிழான் **திருநாவுக்கரசு தேவன்** என்போன் திருஞானசம்பந்தன் திருமடத்திற்குப் பூதானம் செய்தது. (திருச்சி. 854)

2. **வாகீசுர பண்டிதர் :** கி. பி. 1181. இராஜகேசரிவர்மன் திரிபுவன சக்கிரவர்த்திகள் இராஜராஜதேவர் II—9-ம் ஆண்டு. செங்கல்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை தாலூக்கா திருவொற்றியூர் ஆதிபுரீசுவர் ஆலயத்து 2-ம் பிரகாரம் கீழ்ச் சுவர். படம்பக்கநாயக தேவர் ஆலயத்தில் பங்குனி உற்சவத்தின்போது அரசன் முன்னிலையில் ஆளுடைய நம்பியின் புராணம் வாசிக்கப் பெற்றதும் அப்போது அவ்வாலயத்தில் ஒரு மடம் வைத்திருந்த சந்திரானன பண்டிதரும், சோம சித்தாந்தத்தை (காபாலிக சைவர்கள் சித்தாந்தம்) வியாக்கியானஞ் செய்துவரும் **வாகீசுவர** பண்டிதரும், கோயில் நாயகரும், ஸ்ரீகார்யம் செய்வோரும் மற்றும் பலரும் இருந்து கேட்டதாகவும் கண்டிருக்கிறது. (செங். 965)

3. **திருநாவுக்கரையன் :** சோழன் இராஜகேசரிவர்மன்-15-வது ஆண்டு. இவ்வரசன் சிறப்புப்பெயரும் தேதியும் தெரியவில்லை. 12, 13-ம் நூற்றாண்டாக இருக்கும். தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலூக்கா திருமெய்ஞ்ஞானம் ஞானபரமேசுவரராலயத்து வடசுவர். திருமயானத்துப் பரமேசுவரர் ஆலயத்தில் 12 தீபங்களுக்காக 12 ஈயக் காசுகளை நல்லூர் வியாபாரியான நாராயணன் சோழடிகள் என்ற **திருநாவுக்கரையன்** தானம் செய்தது. (தஞ்சை. 128)

4. வாகீசுரதேவ **முதலியார்:**—13-ம் நூற்றாண்டு. சகல லோக சக்கிரவர்த்தி இராஜ நாராயண சம்புவராயன்-12-ஆண்டு புரட்டாசித் திங்கள் முதல் தேதி. செங்கல்பட்டு ஜில்லா சைதாப்

பேட்டை தாலூக்கா திருவொற்றியூரில் ஆதிபுரீசுவரர் ஆலயம். திக்கம நாயக்கனால் வரியிலியாகச் செய்த காடுவன் கோட்டத்து நிலத்தைக் கீழை மடத்து வாகீசுர தேவமுதலியாரால் அவர் இறக்கும் தருவாயில் நித்திய நைமித்தியங்களுக்காகத் தானம் செய்தது. இந்த நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கின விவரம் புழல் கிராமத்தில் உள்ள திருமூலத்தானமுடைய நாயனார் ஆலயத்துக் கற்சுவரில் செதுக்கப்பட் டிருப்பதாகவும் கண்டிருக்கிறது. மேலும் இந்த வாகீசுரருக்குப் பின்பட்டத்திற்கு நியமித்த அழகிய சிற்றம்பல முடையார் என்ற மடத்தலைவருக்கு அந்நிலத்தின் ஓர்பாகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (செங். 1076)

5. வாகீசுர தேவர்:— 13-ம் நூற்றாண்டு-இராஜநாராயண சம்புராயன்-8-ம் ஆண்டு. செங்கல்பட்டு ஜில்லா புழல் திருமூலஸ்தான ஈசுவரமுடையார். பெரும்பற்றப் புலியூரில் வசிக்கும் செல்லத் திருவாரூரின் கீழைமட சந்தானத்திற்குச் சேர்ந்த வாகீசுவர தேவர்க்குப் புழல் கிராமத்துக் குடிதானம் செய்தது கூறுகிறது. (செங். 483 / 1920)

(மேலே 4-ல் கண்ட பெயர் இவரே யாக இருக்கலாம்.)

6. திருநாவுடையார்:—கி. பி. 1396. ஜடாவர்மன் திரிபுவன சக்கிரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவன்—12-ம் ஆண்டு. தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூக்கா சூலமங்கலம் கிருத்திவாசேசுரர் ஆலயத்து முன்மண்டபத்து வட சுவர். நித்தவினோத வளநாட்டுக் கிழார் கூற்றம் பிரமதேயமான சூலமங்கலத்தில் கரியுரித்த நாயனார் ஆலயத்தில் திருநாவுடைய பிள்ளையார் விக்கிரகத்தைப் பாண்டி மண்டலம் தயதணர்க்குடி நாட்டுத் திருவாலவாயுடையர் ஆலயத்து அம்மனது தேவதானக் கிராமமான தானவினோதநல்லூர் திருநாவுடையார் என்பவர் தாபித்து நில தானம் செய்தது. (தஞ்சை. 1040)

7. திருநாவுக்கரசன் திருவீதி : தென் ஆறுகாடு திருவதிகை ஆலயம் திருவீரட்டானேசுரர் கோயில் நிலங்களில் பிடாரி கோயிலுக்கு வடக்கே காடழித்து ஊருண்டாக்கித் திருநாவுக்கர

சன் திருவீதி என்று பெயரிட்டு அதில் குடியேறிய நெய்வோர், வாணியர், அங்காடியார் இவர்களுக்கு வரி விதித்தது. தேதி இல்லை—எழுத்து தற்கால எழுத்து. (403/21)

8. வாகீசுரர் கோயில்: 11-ம் நூற்றாண்டு—சோழர் வீர ராஜேந்திரர் முதலிய அரசர்கள். சாசனங்கள் 29 இக்கோயி லில் உண்டு. இவ்வாலயத்து ஈசுவரன் பெயர் வாகீசுவரர்—மதுரை ஜில்லா பழனி தாலுக்கா கீரனூர்.

(மதுரை243—265 F.)

மேற் காட்டிய விவரங்களால் நாயனார் பெயர்களை மக்கள் இட்டுக்கொண்டது மாத்திரமன்றி ஈசுவரனுக்கும் ஒரு வீதிக் கும் இடப்பட்டது காண்க. அப்பூதியடிகள் சரிதத்தை முன் னிட்டு நமது நாட்டில் இவ்வழக்கம் ஏற்பட்டது ஆராயத்தக் கது.

(e) நாயனார் சரித்திர பாகங்கள்:

1. அப்பரைக் கண்டித்துப் பின் சீடனான மகேந்திரவர் மன்—இவன் சரித்திர பாகத்தைக் கூறும் கல்வெட்டுகள் செங் கல்பட்டு வல்லம் குகையிலும் (185/92) திருச்சி மலைக்குகை மண்டபத்திலும் (S. II vol III. 278) இருக்கின்றன. அவை அப்பர் சரிதத்தை நிச்சயிக்கக் கூடியவைகளே. இதைப்பற்றி முன்னமே கூறியுள்ளோம்.

2. திருத்தாண்டகம் ஓதுதல்: குறுக்கை வீரட்டானே சுரர் ஆலயத்தில் 1207-ம் ஆண்டுக் கல்வெட்டினால் திருநாவுக் கரசர் திருக்குகை கட்டுவதற்குத் தானம் செய்ததை முன்பே குறித்துள்ளோம். அங்கே திருத்தாண்டகம் ஓதும் செய்தியைக் குறித்திருப்பது ஆராயத்தக்கது. பொதுவாகத் திருப்பதிகங் களை (திருப்பதியம்) ஓதுதற்குத் தானம் செய்த விஷயம் சம்பந் தரைப்பற்றிச் சொன்னதிலிருந்து அறிந்துகொள்ள முடியும். அத்திருப்பதிகங்களில் அப்பருடையதும் உண்டு. ஆனால் அவை களில் ஒரு பிரிவான திருத்தாண்டகங்களைத் தனியாக ஓதுவிக்க

ஏற்பாடு செய்தது கவனிக்கத் தக்கது. அப்பர் சுவாமிகளுக்குத் தாண்டக வேந்து என்ற பெயர் உண்டன்றோ?

3. அப்பர் உற்சவம்:—மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தில் கி. பி. 1271-ல் திருநாவுக்கரசு திருவிழா முதற் கொண்டு 12 திருவிழாக்கள் நடத்துதற் பொருட்டுத் தானம் செய்ததை முன்னமே சொன்னோம். அதனாலே நாயனார் சரித்திரத்தை நடத்தி அதை ஒரு விழாவாகக் கொண்டாடினார்கள் என்று தெரிகின்றது.

இவ்விதமாகக் கல்வெட்டுகளின் மூலமாக அப்பர் சுவாமிகளின் சரித்திரம் தெரிவதுமே யன்றி அவரை நடுக்கடலில் கல்லைக் கட்டி வீழ்த்தின பிறகு அக்கல்லே தெப்பமாகக் கரை சேர்ந்த இடத்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு "ஏறவிட்ட குப்பம்" என்ற பெயர் வழங்கி வருவது போன்ற பல அடையாளங்களாலேயும் அறியக்கூடும்.

மேலே குறித்த கல்வெட்டுகளிலிருந்து அப்பர் சுவாமிகளைப்பற்றி பல விவரங்கள் தெரிந்து கொண்டோம். இன்னும் நாளிதுவரை எடுத்து ஆராயப்படாத பல கல்வெட்டுகள் கிடைக்குங் காலத்து இவ்விவரங்கள் பெரிதும் விரிக்கக்கூடும் என்று அறியலாம். அதற்காகக் கல்விமான்கள் ஊக்கமுடன்வேலை செய்யவேண்டுவது அவர்கள் கடமை. ஆகவே 10-முதல் 14-ம் நூற்றாண்டுகள் வரையில் சோழர்கள், பாண்டியர்கள், சாம்பவராயர் இவர்களால் அப்பர் சுவாமிகள் பூஜிக்கப்பெற்று, அன்புடன் போற்றப் பெற்றார் எனவும், அவர் பெயரை மக்கள் மாத்திரமே யன்றி ஈசனுக்கும் பொருள்களுக்கும் இட்டுப் போற்றி வந்தார்கள் எனவும், அவர் பெயரால் மடங்கள் நிர்மாணித்து அன்னதானம் செய்தார்கள் எனவும், அவரருளிய பதிகங்கள் தாண்டகங்கள் ஆலயங்களிற் பாடப் பெற்றனவெனவும் அறிந்தோம். மேலும் அவர் சரிதத்தின் சில உண்மைகளையும் அறிந்தோம்.

முற்றும்.

# கொலைப்பட்ட கோவலனும் வலைப்பட்ட காவலனும்

[திரு. S. கணபதி, சீனியர் B. A. மாணவர், இந்துகலாசாலை, திருநெல்வேலி.]

நலங்கள் பலவும் கெழுமித்துலங்கும் காவிரிப்பூம்பட்டினமானது வடுவஞ்சி வாய்மொழிந்து தமவும் பிறவும் ஒப்பநாடிக் கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது நடுவின்றி நன்பொருள் வெஃகாது, மறநெறி கடிந்து அறநெறி புக்கு ஒழுகும் பெருந்திருவனப்புடைய அருந்திரு வணிக மாக்கள் பலரது விழுப்பெருங் குடியால் கவின்செயப்பெற்று நின்றது. இன்னணம் பொருளீட்டும் புலமையில் தலைமை சான்ற இவ்வருந்திறல் மரபில் தோன்றிய கோவலனென்னும் இருநிதிக் காவலனுக்குக் கற்பிற் கணியாய கண்ணகி யென்னும் பொற்புடைச் செல்வியைக் குன்று நலனும் பொன்றுப் புகழு முடைய பெருங்குடி வணிகர்கள் மணம் புரிவித்தனர். மணமகனும் மணமகளும் இரதியும் மதனும் போன்றும், அன்றிலும் அகன்றிலும் போன்றும் ஒன்றி வாழ்ந்து, 'ஆவிற் கிருகோடு' தோன்றினாற் போலும்,

> " காகத்திரு கண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
> ராகத்துளோ ருயிர் கண்டனம் யாம் "

எனக் கண்டாரேத்த இல்லறமாகிய நல்லறநெறியில் நவைபட ஒழுகாது இன்பச் சுவைபட ஒழுகி, அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும், விருந்தெதிர் கோடலும், துறவோர்க் கெதிர்தலுமாகிய தொல்லறத்தைப் பல்லாற்றானும் புரிந்து வருவாராயினர். இங்ஙனம் ஒழுகும் எல்லையில் கோவலன் ஆடலினும், பாடலினும், அழகினும் ஒப்பாரு மிக்காருமில்லா மாதவிபால் நேசம் என்னும் இன்பப் பாசத்தால் பிணிக்கப் பட்டு, இல்லக்கிழத்தியின்பால் ஊடினனெனக் காமக்கிழத்தியினுழைச்சென்று கூடி, இருநிதியென்ன பெறலரும் தன் பெருநிதிக் குவைகளை யெல்லாம் வெறுக்கையென அன்னாள்பால்

வெறுத்து வீசி, பிற்றை ஞான்று அவள் முன் நிற்றற்குக் கூசிக் கண்ணகியைக் குறுகி,

" சலம்புணர் கொள்கைச் சலதி யொடாடிக்
குலந்தருவான் பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரு மெனக் கென்ன "

அப்பொற்றெடி நங்கையும் சிலம்புள கொள்ளுமெனக் கல னேடுலந்த பொருளீட்டுவான் கவுந்தியடிகளுடன் அமிழ்தினு மினிய தமிழ் நலம் கமழும் ஆடல்சான்ற கூடல்மா நகரத்தைக் கூடினன்.

கூடினவன் மாதரி என்னும் ஆய்மகளைக் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்கு ஆயமும், காவலும், தாயுமாக அமர்த்தித் தான் பிரிந்துழி கண்ணகியாம் பெண்ணுயகி மபங்குதல் ஒரோவழிக் கூடுமென்று நனி உன்னி,

" நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந் துணையாக
வென்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னொன்று கொண்டியான் போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென "

இழுமென் மொழியால் விழுமிய சொற்கள் பல சொல்லிச் செல்லாச் செல்வன் (தொலையாத செல்வத்தையுடைய கோவலன்) செல்வானுயினன்.

பின்னர் ஈண்டிய வளனுடைப் பாண்டிய நாட்டில் தன் நங் கையின் சிலம்பை அங்கையில் தாங்கி விலை பகர்தற்குச் சென்ற அவ் இல்லோர் செம்மல் (வறியவர்க்குத் தலைவன்; இல்லறத்தார் குத் தலைவனென்று கோடலும் சாலும்) கூற்றுவனெனனத் தன் னெதிர் வந்த பொற்கொல்லனால் "கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்" என நெறி திறம்பா மன்னன் நெறி திறம்புதற் பொருட்டும், வழுவுறுத வழுதி வழுவுறுதற் பொருட்டும், வளை

யாத செங்கோல் வளைதற் பொருட்டும் பாண்டியன் முன்பு குற்றஞ் சாட்டப் பெற்றான். பாண்டியனும் அஞ்ஞான்று தன்னிடத்தில் ஊடிச் சென்ற தேவியைக் கூவிச் செல்கின்றவனுகலானும், வினைவிளை காலமாகலானும் உண்மையினை ஆய்ந்தோய்ந்து பாராது,

"சிலம்பு
கன்றியகள் வன்கைய தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்"

கல்லாக் களிமகனொருவன் பொல்லா வுள்ளமொடு கோவலன் மீது வெள்வாளோச்ச அவனும் வஞ்சகன் வாளுக்குத் துஞ்சாதிருத்தல் நேரிதன்று என்று நன்று நெஞ்சகம் கொள்வான் போல்,

"காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்".

இதனைத் தக்கார்வாய் கேட்டறிந்த கண்ணகி விண்மாரியெனக் கண்மாரி உகுத்து,

"காய்கதிர் செல்வனே கள்வனோ வென்கணவன்"

எனக் கூஉய்க் கலக்க முற்றும் அஞ்சா நெஞ்சம் படைத்தவளாய்ப் பாண்டியன் அவையை அண்மி 'என் கணவன் கள்வனென்று சொல்லப்படுவானுமல்லன்; கொல்லப்படுவானுமல்லன்', எனத் தனது மற்றொரு காற்சிலம்பு கொண்டு வலியுறுத்தினள். முடியுடை வேந்தனும் தான் எண்ணித் துணியாது செய்த தன் கருமத்தை எண்ணி நெஞ்சகம் நைந்து நைந்துருகி,

"தாழ்ந்த குடையன் றளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன்றன் சொல்கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென்னாயுளென"த்

தன் மெய்யினின்ற உயிரை விடுத்து வெற்றுடம்பாயினன்.

நிற்க, முத்தமிழிலங்கும் பண்டைத் தண்டமிழ் நாட்டில் செங்கோலோச்சிய முடியுடை வேந்தர் மூவருள்ளும் ஈண்டிய வளனுடைய பாண்டிய மன்னர்கள் குடிதழீஇக் கோலோச்சும் பெற்றி வாய்ந்தவர்கள். அவர்களது வெண்கொற்றக் கொடை

கூடினார்க்கு நிழற் செயும்; கூடாதார்க்கு அழற் செயும். அவர்கள் தம்மில் மாறுபட்டார்க்கு ஞாயிறு போன்றும், மாறுபடாதார்க்குத் திங்கள் போன்றும் விளங்குவார்கள். அவர்கள்,

"அறநெறி முதற்றே யரசின் கொற்ற
மதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற்றன்ன வெந்திற லாண்மையுந்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்தன்ன வண்மையு மூன்றும்" (புறநானூறு.)

உடையராகி வயங்குதல் வேண்டுமென்பதைத் தெள்ளிதின் உணர்ந்து வள்ளியராக வழங்கும் சீர்மையை யுடையவர்கள். அதனாற்றான் குடிகளும்,

"நிவந்தோங்கு வெண்குடை மண்ணக நிழற்செய
வேலுங்கோலு மருட்கண் விழிக்க
நீதின் றருள்கநீ யேந்திய திகரி
நினக்கென வரைந்த வாண்டுக ளெல்லா
மனக்கினி தாக வாழிய வேந்தே" (மணிமேகலை.)

என்று வழுத்தி அவர்களுடைய அடிதழீஇ நிற்கலாயினர். மாதவர் நோன்பும், மடவார் கற்பும் ஏதமுறு வண்ணம் அரண் செய்து நிற்பது அவர்களுடைய செங்கோலாகும். அவர்களுடைய ஒண்குடையின் ஒருசார் அத்தனானந்த னமுதனென்றள்ளூறித் தித்திக்கப்பேசும் சிவநேசச் செல்வர் பலர் வாழ்வர். மற்றொரு சார் சீதப்புனலாடி, சிற்றம்பலம் பாடி, வேதப் பொருள் பாடி, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானைப் பழச்சுவை யென்றும், அமுதென்றும் மாந்திக்களிக்கும் தவநேசச் செல்வர் பலர் விளங்கா நிற்பர். இன்னொரு மருங்கில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் கவிவல்லவர்கள் கூடி ஆடியும் பாடியும் நிற்பர்.

இன்னணம் சிறப்புடை மரபிற்றோன்றிய பாண்டிய மன்னன் கோவலன்பால் நெறி தவறியது யாங்ஙனமெனின், அது பண்டை விளைவாகி வந்த வினையினால் என்ப. பாண்டியன் கூடல் நாடக மகளிருடைய ஆடல் பாடலில் மயக்குற்று

இருந்ததினால் அவன் தேவி ஊடிச்சென்றாள். ஊடிச் சென்றாளைக் கூடி இன்புறுவான் புக்க மாறனை, செவ்வி பார்த்திருந்த பொற்கொல்லன் கண்டான்; கண்டவன் கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் கோவலனென்றான்; பாண்டியனும் தன் பெருந்தேவியின் ஊடலைத் தணிப்பதற்கு அச்சிலம்பு கருவியாயிருக்குமென்பதைக் கண்டான்; கன்றிய கள்வன் கையகத்தாயின் அவனைக்கொல்ல அச்சிலம்பொடு ஈங்குக் கொணர்கவெனக் கூறக்கருதியவன் வினைவிளைகின்ற காலமாகலான் ஒன்றும் தேராளுகிக் கொன்றச்சிலம்பு கொணர்கவென்றான்; கோவலனும் கொல்லப்பட்டான்; காவலனும் வினை வலைப்பட்டான். வினை வலைப்பட்ட அவ்வழுதி கண்ணகியைக் கண்டஞான்று தன் அற நெறியைத் தோற்றான். அவள் வழக்குரைத்த ஞான்று தன் உயிரையும் தோற்றான். இவ்வுண்மை,

“ மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுங்
கையிற்றனிச் சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றனக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்றா னுயிர் ”

“ சாவியுகு நீருங் கையிற்றனிச் சிலப்பு
மாவி குடிபோன வவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான் ”

என்ற இளங்கோவடிகளது கரும்புந் தேனு மமுதும் பாலுங் கலந்த செஞ்சொல் வாக்கால் உணரற்பாற்று.

இங்ஙனம் தன் குற்றம் கண்டுழி “யானோ வரசன் யானே கள்வன்.........கெடுகவென்னாயுள்” என ஆவிநீத்த பாண்டியனது அருஞ்செயல் எஞ்ஞான்றும் போற்றற்குரிய தொன்றாம். கண்ணகிதன் கேள்வனது காரணத்தால் அவனது, வளையாத செங்கோல் வளைந்ததாயினும் அவன் தன்னுடைய பெறலரும் அரிய உயிரை ஈந்து அறநெறியை ஒம்பினான்; செங்கோல் வளைய உயிர் வாழார் பாண்டியர் என்ற தங்களது அரிய பெரிய சீரிய குறிக்கோளை உலகம் தெள்ளிதின் அறியுமாறு எடுத்துக் காட்டினான். பாண்டியன் தன் உயிரைப் பெரிதாகக் கருதின

னில்லை; அறநெறியையே உயிரினும் சிறந்ததாகக் கருதினன். எனவே அவன் தன்னுடைய பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை எய்தப் பெற்றான். இவ்வரலாறு,

"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையி னிகந்த சொற்செவிப் புலம்படாமு
னுயிர்பதிப் பெயர்த்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது."

என்ற சேரன்செங்குட்டுவனது வாய் மொழியினானும் வைத்து உணரப்படும்.

கோவலன் கொல்லப்பட்டதும் காவலன் ஊழ்வலைப் பட்டதும் பண்டை விளைவாகிவந்த வினையினாற்றான் என்பது சிலப்பதிகாரம் படித்த எல்லவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மை என்பது வெள்ளிடை மலை.

"கொடும்பரவர் கழியுழக்கக் குதித் தெழுமீன்
ஆய்ச்சியர் பாற்குடத்துள் வீழ்ந்தங்
கடும்பயத்தோ டலமரு மற்றவர் கடையுந்
தயிரோதைக் கலமந் தோடி
ஒடுங்குமுயல் கைதையினு ளடங்கி யங்கட்
கடலொளி கேட்டுள்ள மாழ்கும்
கடுங்கருமத் தோட ரந்தோ யாங் குறினும்
விடாதென்னக் காட்டு மோர்பால்."
(காஞ்சிப்புராணம்—திணை மயக்கம்.)

---

# சென்னைக் கடற்கரை

[திரு. அ. சிதம்பரநாதன் அவர்கள், பீ. ஏ.]

உலகு மீக்கூறும் கடற்கரைகளுள் சென்னைக் கடற்கரை இரண்டாவதாகும். முதலாவதி யாதெனின், அமெரிக்கா தேசத்தில் பிரேசில் (Brazil) என்னும் நாட்டின் கண்ணுள்ள "இரையோடி சினிரோ" (Rio De Janeiro) எனக்கூறுப.

அஃதொன்றன்றி, நமது சென்னைக்கடற்கரையை அழகிலும் நிகளத்திலும் ஒப்பதுமிக்கதுமில்லை யென்று சொல்லலாம். இக்கடற்கரை யோரமாக வாழக் கொடுத்துவைத்தவர் பலருண்டு. அல்லும் பகலும் அறுபதுநாழிகையும் அங்ஙனே வாழ்ந்துவருவோர் பரதவர் ஆவர். இவரே யன்றிப் பகலிலொன்றே, அதனினும் பத்து நாழிகை முதல் இருபத்தைந்து நாழிகை வரையே, கடற்கரை யோரமாகக் கட்டப்பட்டுள்ள கண்ணைக் கவரும் மாளிகைகளில் தங்கி யிருப்போர் சிலருண்டு. அவர்தாம், வடபால் கப்பல் இலாகா அதிகாரிகள் முதலாகவும், அரசாங்கக் காரியாலய அதிகாரிகள் இடையாகவும், தென்பால் மாகாண ஊர்க்காவலரின் அதிகாரிகள் கடையாகவும் உள்ளோராவர். அவரைப்பற்றிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம் அன்றெனவறிக. அன்றி, இளமைப்பருவத்தில் தேகப்பயிற்சி யின்னதென்றறியாதிருந்து மனப்பயிற்சி யொன்றையே கைக்கொண்டு துன்பத்துக்காளாகி, இஞ்ஞான்று அத்துன்பந் துடைப்பான் வேண்டிப் பேரார்வத்துடன் கடற்கரை யோரமாக வைகறைப் பொழுதில் ஓடுபவரைக் குறித்து எழுத எழுந்ததுமன்று இஃதென்க. சில மனிதர் தள்ள, சில மனிதர் முட்ட, சில மனிதர் இழுக்க, பார்ப்போர்.

> "அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
> வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—யிச்சையே
> வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
> தாழ்ந்துசில பேரிருக்கத் தான்"

என்ற குகை நமசிவாய தேவரின் திருவாக்கையும்,

> "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்ற பொய்யா மொழியையும் நினைத்துக் கொள்ளச் செய்து போகும் கட்டை வண்டிகளையும் அவற்றை ஈர்த்துச் செல்லும் இருகால் எருதுகளையும் பற்றிக்கூற எழுந்ததோ இஃதெனின், அஃதுமன்று. பின்னர் அல்லினிடையே இக்கடற்கரையோரமாக நிகழுமவற்றைக் கூற எழுந்ததோவெனின், அஃதுமன்றே.

மற்று, மாலைப் பொழுதில் அங்குக் காணப்படுமவற்றுட்

சிலவே இங்குக் கூறப்படுகின்றன. கடற்கரைப் பக்கம் மாலை நேரத்திற் போவோர் யாரும் முதலிற் காண்பது சீறிக்கொண்டும், உறுமிக்கொண்டும், புகைந்துகொண்டுஞ் செல்லும் மோட்டார் வண்டிகளே. அவ்வண்டிகள் பற்பல வகையானவை பற்பல பெயருடன் கடற்கரை யோரமாகக் கீழ்பால் ஒரு பெருந் தொடர்போல் நிறுத்தப்பட்டிருக்கும். தலையிலிருந்து பார்ப்போர் சில விடங்களில், இவை யென்ன பிணைக்கப்படா மோட்டார் சங்கிலியோ என நினைக்கக் கூடும். அவ்வண்டிகளினுள்ளே உட்கார்ந்திருப்பவருட் சிலரைக் காணின், இவர் காலென்ன நிலத்திற் றோயாதோ இவர் முகமென்ன சூரியனொளிபடின் கூம்பி விடுமோ என்றதுபோன்ற ஐயங்கள் நிகழும். இவ்வண்டிகளுட் சில பெண்டிராற் செலுத்தப்பட்டுச் செல்வதைக் காணும் உள்நாட்டு வாசிகளுட் சிலர் மூக்கின்மேற் கை வைத்து "இவரென்ன ஆடவரினுங் கடிது செலுத்திப் போகின்றனரே! நன்று, நன்று!! ஆடவரை வெல்லப் பார்க்கின்றனர் இவர். உலகக் கேட்டின் அறிகுறியோ இது"! எனக் கூறிச் செல்வார். "சம்பராசுர யுத்தத்தில் கைகேசி தேரைச் செலுத்தித் தயரதனைக் காத்தது போல், துன்பம் நேர்ந்துழி இவருங் காரைச் செலுத்திப் போய்த் தங் கணவர் கிளைஞரையுங் காக்கக்கூடும். ஆனால், கைகேசி இரண்டு வரம் பெற்று மண்ணைத் தன் மகனுக்குக் கொண்டு, தன் கணவனின் உண்ணோரா வியைப் போக்க ஏதுவாகி, வள்ளலை வனம் புகச் செய்து, சீதையைச் சிறைப்படச் செய்ததுபோல், காரூர்ந்து செல்லும் இக் கேகயங்கள் செய்வதாயின், கேடே கேடே" என்று நினைத்துப் போவாருமுண்டு. இவ்வண்டிகளுட் போவோரை யறியாத பலரும், அவரால் அறிந்து கொள்ளப்படாத பலரும், அறிமுகஞ் செய்து வைக்கப்படாத பலரும் "கும்பிடு போட்டுக் கும்பிடு வாங்கலாம்" என நினைத்தும், "காரிற்போகு மவரும் கும்பிடு போட்டாரல்லவா?" என்ற வீண் பிதற்றலால் மகிழக் கருதியும், கும்பிடு போட்டுக் கும்பிடுவாங்குவதையும், சிற்சில வமயங்களில் மறு கும்பிடின்றித் தலைகுனிந்து செல்வதையுங் காணலாம்.

மோட்டாரிற் போவோர்க்கே யன்றிக் கடற்கரை யோரமாக அமைக்கப்பட்டுள்ள கற்றரையின்மீது கடவுள் கொடுத்துள்ள இருகால் மோட்டாராற் செல்லுஞ் சிலருக்கு வேறு சிலர் கைம்மாறு கருதாது கும்பிடு போடுவதையும், கரக்கம்பஞ் செய்து சிரக்கம்பம் பெறுவதையும், அஞ்சலி செய்து அரைக் கும்பிடு பெறுவதையும், அரைக் கும்பிடு கொடுத்துத் தரைக் கும்பிடு வாங்குவதையும், கைக்கும்பிடு கொடுத்துக் கண் கும்பிடு வாங்குவதையும், கரக்கும்பிடு கொண்டு மூரற் கும்பிடு வாங்குவதையுங் கண்டு "எத்தனை விதக் கும்பிடு? ஐயா!" என்று சொல்லா விட்டாலும் நினைப்பார் பலர். இவரே யன்றிக் கும்பிடு போட்டுக் கும்பிடு பெறுவழி, "என்ன அகந்தை இவனுக்கு!" என்று குறை கூறுவோர் சிலர்; "கொடுத்த கும்பிடைத் திருப்பிக் கொடுக்க மதியா அறியா முடியா இவன் வேறெதைக் கொடுப்பினும் திருப்பிக் கொடுப்பனோ? கொடான், கொடான்" எனக் கூறிப் போவார் சிலர். முன்னொரு நாள் கும்பிடு மறந்து சென்ற வொருவன் பின்னொரு நாள் தன் னண்பனைக் கண்டு அஞ்சலி செய்யுங்கால், அந்நண்பன் "இப்பொழுதென்ன? ஏதேனும் என்னிடம் ஆகவேண்டிய துண்டோ? அன்று நான் செய்த அஞ்சலிக்கு மாற்றஞ்சலி யின்றி வெட்கிப் போகும்படி செய்தாயே! அஃதென்ன?" எனக்கேட்டு நிற்பதையும் அதற்குச் சமாதானம் பெறுவதையுங் காணலாம். அவ்வாறு கூறப்படுஞ் சமாதானங்களுள் "நீ போட்டதை நான் பார்க்கவேயில்லை; உன்னை யான் பார்க்கவேயில்லை" என்றவை பெரும்பாலும் கேட்கப்படும். பின்னும் விடாது, "ஆனால் மெய்ம் மறந்து சென்றனையோ? கண்ணொரு பக்கம் மனமொரு பக்கமோ?" என்று சிலர் கேட்கும் வினக்களுங் காதில் விழும்.

தந்தையுந் தநயனுமாகிய விருவர் ஒருநாள் அக்கற்றரை மீது நடந்து போகுங்கால், எட்டுப் பேராகச் சென்ற வொரு சிறு கூட்டத்தாருள் மூன்று பேரே தன் தந்தைக்கு அரைக்கும்பிடு இட்டுச் சென்றதைக் கண்ட தநயன் "ஏன் அப்பா, மற்றவர் போடவில்லை?" என்று வினவி நின்றது கண்ணுற்கண்டு செவியாற் கேட்ட தொன்றாகும்.　　(இன்னும் வரும்)

# கருமை

[திரு. கபசம் எழுதியது]

(சிலம்பு ௮, ௭௨௫-ம் பக்கத்தொடர்ச்சி)

புறவொளி நல்கு ஞாயிறுபோல் அகவொளியளிக்கு மொரு முதற்பொருளுண்டென்ற வுணர்ச்சி மிகப்பண்டை நாளிலேயே பற்பல நாடுகளிற் றோன்றிற்று. தேவர்களென்போர், ஒளிவீசு முருவினராகவே எல்லா நாட்டாராலுங் கருதப் பட்டனர். விண்ணவரைத் தீட்டு மோவியங்களில், அவர்களைச்சுற்றி யொளி வீசுவதைக் காண்கின்றோம். இறைவன் வந்து வெளிப்பட்டதாகப் பண்டைக்கால நூல்கள் கூறுமிடங்களிலெல்லாம், அழற் பிழம்பு அல்லது ஒளி தோன்றியதென்று பெரும்பாலுங் குறிக்கப் பட்டிருக்கிறது. வானிற்றோன்றும் இடியு மின்னலும் விண்ணவர் தலைவராகிய ஸீயூஸ் (Zeus) கையில் வைத்திருக்கும் பெரும்படை யென்று கிரேக்கர்கள் (The Greeks) எண்ணினர். மின்னலுக்குப்பின் கேட்குங் குமுறலை தேவர்கள் செலுத்துந் தேரினோசை யென்று சொல்வா ரின்னுமுளர். ஞாயிறுந் திங்களும் எந்நாட்டிலும் தேவர்களாகவே கருதப்பட்டனர். தேவர்கட்கு மவுணர்கட்கு நடந்ததாகச் சொல்லப்படும் போர்களெல்லாம், ஒளிக்கு மிருளுக்குமுள்ள பகைமையைக் காட்டுமன்றிக் கட்டுரையின் முற்பகுதியிற்சொன்னதை ஈண்டு நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். இங்ஙனம், ஒளியுங் கடவுட்டன்மையு மொன்று பட்டு நின்றதன் பயனாக, பெரும் பொருள்கள் (பஞ்சபூதம்) ஐந்தனுள், நெருப்பிற்கு மிறைவனுக்கு மிக நெருங்கிய கேண்மை எழுந்தது. இதுகொண்டே இறைவனுக்கிடும் பலியைத் தீயின் வாயிலாகச் செலுத்துவது வழக்கமாயிற்றென்று கொள்ளக் கிடக்கிறது.

நாகரிக மென்பதே மக்கள் நெருப்பைக் கையாளத்தொடங்கிய பிறகுண்டாயிற் றென்பது மிகைபட மொழிதலாகாது. முதலில் உலகில் நெருப்பென்பதே கிடையாதென்றும், அது விண்ணில் தேவர்கள் பாலிருந்த தென்றும், அதை யொருவன் திரு

டிக்கொணர்ந்து மக்களுக்குக் கொடுத்தவர்களை யுயர்த்தினு னென்றும், இதுகண்ட தேவர்கள் தங்கள் மறைபொருளாகிய நெருப்பைக் கவர்ந்துசென்று மன்பதைக்களித்த மகனாகிய பிராமித்தியஸ் (Prometheus) என்பவனை விண்ணளாவிய மலை முடிகளிடையே விலங்கிட்டுக் கிடத்திக் கழுகுகள் வந்து அவ னது ஈரலைப் பிடுங்கித்தின்னு மாறு செய்தனரென்றும், கிரேக் கப்பழங்கதைகளிற் (Greek Mythology) சொல்லியிருக்கிறது. இதன்பொருளென்னவெனின், நெருப்பினுதவி கொண்டே மக்க ளுயர்வெய்தின ரென்பது தான். கல்லாலமைத்த கலங்களை யும் படைகளையுங் கொண்டு முரட்டு வாழ்க்கை நடாத்திய முதன்மாக்கள் நெருப்பைக் கண்டு பிடித்தபின் செம்பு, இரும்பு முதலியவற்றை யுருக்கிவடித்து முன்னினுஞ்சிறந்த படைகளையு மணிகலன்களையும் வகுத்துக்கொண்டு நாவிற்கினிய நல்லுணவு களை யாக்கும் வகையறிந்து நாகரிகத்திலுயர்ந்தன ரென்பதை வரலாற்றுவாயிலா யறிகின்றோம். ஆகலின், தொடக்கத்தில் நெருப்பு விண்ணவரன்றி வேறெவரு மறியாத மறைபொருளா யிருந்த தென்று கிரேக்க புராணங்கள் கூறுவது வியப்பன்று; இறைவனுடன் நெருப்பை யுலகெங்கும் புணர்த்திக் கருதியதும் வியப்பன்று.

வழிபாடு நிகழுங்கால் இரவாயினும் பகலாயினும் விளக் கேற்றி வைப்பது பெருவழக்காயுளது. கிறித்தவரிற் பெரும் பகுதியினராகிய உரோமநெறியர் (Roman Catholics) இன்று மவ்வழியைப் பின்பற்றுகின்றனர். மெழுகு வர்த்திகளின்றி அவர்களது வணக்கம் பெரும்பாலு நடைபெறுவதில்லை. இவர் களினின்று விலகிநிற்கும் புரோட்டஸ்ட்டென்ட் (Protestant) நெறியாருட் சிலரு மங்ஙனமே செய்கின்றனர். இந்தி யாவிலுள்ள பெருங்கோவில்களில் இருளுட்டோன்று மொளியி லிறைவனை வழிபடுகின்றனர். விளக்கென்பது புறவிருளையோட் டுவது. அகவிருள் நீக்கம் விளக்க மெனப்படும். ஆதலின், புறப்பொருளாகிய விளக்கு, அகநிகழ்ச்சியாகிய விளக்கத்திற் கறி குறியாயிற்று. விளக்கில்லா வீட்டில் மக்கள் வதியார்; விலங்குகள் வாழும். விளக்கமில்லா மனத்திலு மிறைவ னுறை

யான். மாலையில் விளக்கேற்றி மலர்தூவிக் கும்பிடும் வழக்கந் தமிழ்ப் பெண்கள் சாலத் தொன்னாளிலேயே பயின்று வந்த தொன்றாகும்.

"இரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது"

(நெடுநெல்வாடை 42-43)

ஒளிதரு நெருப்பே கடவுளென்ற கொள்கையினர் பல்லாயிர மாண்டுகட்கு முன்னரே தோன்றினர். அவர்களின்று முளர். பம்பாயில் வணிகத் தோன்றல்களாய்த் திகழ்வோரிற் பலர் இச்சமயத்தவர்களே யாவர். பார்ஸிகள் (The Parsees) என்றிவர்கட்குப் பெயர். முதலி லிவர்கள் பெர்ஷியா (Persia) நாட்டி லிருந்தனராதலி னிப்பெயர் பெற்றனர். அந்நாட்டிற் றான் அவர்களுடைய சமய குரவராகிய சொரேஸ்ட்டர் (Zoroaster) தோன்றினர். பெர்ஷியா பழைய ஆரிய நாடென்பது உணரத்தக்கது. ஆரியமொழியின் தொன்மை நிலையைக் காட்டும் நூல்க ளிரண்டு. இவை வேதங்களென்று நாமறிந்தவையும், பழைய பெர்ஷிய மொழியிலெழுதப்பட்ட ஸெண்ட்அவெஸ்டா (Zend Avesta) என்பதுமாம். பின்னர்க் கூறப்பட்ட விந் நூலே பார்ஸிகளின் கொள்கைக் கடிப்படையாய் நிற்பது. இந் நூலில், சுரர், அசுரர் என்ற சொற்களுக்கு, வேதங்களிற்காணப் படும் பொருளுக்கு நேர்முரணாய பொருள் வெளிப்படுகின்றது. அசுரர் என்பவர் தேவர்களாகவும், சுரர் என்பவர் அரக்கர்களாகவும் காணப்படுகின்றனர். இஃதெங்ஙனமாயினும், பழைய ஆரியர் நெருப்பையே கடவுளென வணங்கின ரென்பதி லையமின்று. இந்தியாவிற் கவர்கள் வந்தபின் அவர்களுடைய வணக்கமுறை சிறிது சிறிதாக மாறி வேறாயிற்று. ஆரியர் வருவதற்குச் சில்லாயிர மாண்டுகட்கு முன்னரே, அறிவிற்சிறந்து நல்வாழ்க்கை நடாத்திய உயர்மக்கள் இந்தியாவிலிருந்தன ரென்பதற்கு மறுத்தற்கரிய சான்றுக ளிப்போது கிடைத்திருக்கின்றன. இவர்களுடன் ஆரியர் பழகத் தொடங்கியபின்தான் உபநிடதங்களெழுதப்பட்டன வென்று மறைமலையடிகள் முதலிய தமிழறிஞர்

கூறுகின்றனர். நெருப்பைக் கடவுளென்று வணங்கும் ஆரிய முறை இந்தியாவிற் பிறந்த தன்று.

தமிழருக்குள் தொல்காப்பிய மெழுதப்படுவதற்கு முன்பே முத்தீ வணக்கமென்று கூறப்படு மொருவகை வழிபாடிருந்தது. முத்தீயாவன:—கொடிநிலை, கந்தழி, வள்ளி. இவ்வழிபாடு இந்தியாவின் தெற்கிலுள்ள பொதியமுதல் இமயம்வரை பரவியிருந்த தென் றெண்ணத் தமிழ்நூல்க ளிடந்தருகின்றன. சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டில்,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தியந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே"

(புறம். 2-வது செய்யுள். வரி. 21-24)

என்று நவின்றமையால் முத்தீவணக்கம் இந்தியாவெங்கும் பரவியிருந்தமை பெறப்படும். ஒளிக்கு முதலாக இறைவனைக் கருதி வணங்குவதே முத்தீ வழிபாட்டின் உட்பொருள். ஆரியர்க்கும் முத்தீவணக்க முண்டு. அஃதெங்ஙன முண்டாயிற்றென்று ராய்க. இதுகாறுங் கூறியவற்றால் நெருப்பிற்கு மிறைவனுக்கும் பண்டை முதலிருந்த ஒற்றுமை நன்குணரப்படும்.

ஒளியும் வெப்பமும் ஒன்றையொன்று பற்றி நிற்குமாறு இயக்கமும் வெப்பமு மியைந்து தோன்றுகின்றன. இவை மூன்றுமொன்றே என்பது அறிஞர் துணிபு. ஒரு கட்டையின் மேல் மற்றொரு கட்டையைத் தேய்ப்பதாற் பிறக்குஞ் சூட்டை அறியார் யார்? இம்முறையிற்றான் முதலில் நெருப்புண்டாக்கின ரென்பது நமக்குத் தெரியும். கட்டையைக் கடைவதாற் பிறந்த தீயே வணக்கத்திற்குரிய தென்று முன்னோர் கொண்டனர். இயக்கத்தால் வெப்பமும் நெருப்பு முண்டாவதுபோல், நெருப்பால் இயக்கமுண்டாம். வெப்பம்பெற்ற நீர் கொதித்து மேலுங் கீழுஞ் செல்வதே இதற்குப்போதிய சான்றாம். ஆதலின், இயக்கத்தலைவனாக முன்னோர் கண்ட சிவன், இயல்பு பற்

றியு மியைபு பற்றியு நெருப்புடன் சேர்த்தெண்ணப் படுகிறான். “ஆரழலேந்தியாடு மாவடுதுறையுளானே” எனவரு முறைகளை நோக்க, இது நன்கறியப்படும்.

ஒருகால் மாலுமயனுந் தம்முள் பெரியாரியாரென்று வழக்கிட்டு நிற்ப, கண்ணிலுங் கையிலுந் தீயுடைய வரன், சேண்நிவந்தொளிரு மொரு அழலுருவாகி நின்று, ‘இத னடிமுடி தேடுமின்’ என, மாவலிமுன் விண்ணோக்கி வளர்ந்த மால், கீழ் நோக்கி நிலத்திற்புகுந்தும், தொடங்கற்கட்டோன்றிய முதியவன் மேனோக்கி விண்ணிலெழுந்தும், அழற்பிழம்பின் முதலீறு காண்பா ஞேடின ரென்று புராணமியம்பும். இதனாலுஞ் சிவனுந்தீயு மியைந்து நிற்றலறியப் படும்.

(தொடரும்)

---

# ஆணும் பெண்ணும்

[திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை யவர்கள்]

இம்மண்ணுலகில் உடம்பெடுத்துள்ள உயிர்களெல்லாம் ஆணென்றும் பெண்ணென்றும் இருவகுப்பாகப் பிரித்துணரப் படுகின்றன. இருப்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய அனைத்துயிரும் ஆணும் பெண்ணுமாகவே வாழ்கின்றன. எல்லா உயிர்களும் ஆணாக இருந்தாலும் பயனில்லை, பெண்ணாக இருந்தாலும் பயனில்லை. ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து சேர்ந்து வாழும் வாழ்க்கையிலேயே இன்பமும் பயனும் விளைவனவாகும். பிள்ளையைத் தருவதும் பிள்ளையைப் பெறுவதும் ஆகிய இவ்வொரு வேறுபாடு மாத்திரமே ஆணிடையும் பெண்ணிடையும் அமைந்துள்ளது. இவ்வேறுபாடு இல்லையானால் உலகவளர்ச்சி இல்லாமற்போவதோடு மிக விரைவில் உயிர்களின் தோற்றமே அழிந்துபடும். இதுபற்றியே மணிமொழிப் பெருந்தகையாரும்,

“தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ

பெண்பா லுகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ ”

என மொழிந்தருளினர்.

உலகவளர்ச்சியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒத்த பொறுப்பே; ஆனாலும் ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கே பெருகிய துன்பம். பிள்ளையைக் கருவில் ஏற்றுப் பத்து மாதங்கள் சுமந்திருப்பது பெண்ணே யன்றோ? பின் அளவிடமுடியா அல்லலை யடைந்து பிள்ளையைப் பெற்றுப்பேணி வளர்ப்பதும் பெண்ணே யல்லவோ? கருவுயிர்க்க மாட்டாமல் காலன் வாய்ப் படும் கனங்குழைக் காரிகையார்க்குக் கணக்குமுண்டோ? இதனாலல்லவா இப்பிள்ளைப்பேறு பெண்களுக்கு மறுபிறப்பு என்று கூறப்பெறுகின்றது? “பெண்ணைப் பேணி வளர்த்தல் வேண்டும்” என்னும் பழமொழி எழுந்ததும் இதனாலன்றோ? உலக வாழ்க்கையில் ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கே அதிகமான பொறுப்புளதென்ற உண்மை இதனால் விளங்குகிற தல்லவா?

பொறுப்பு மிகுதியுடைய பெண்ணே குடும்பவாழ்க்கையில் ஆணைக்காட்டிலும் உரிமை மிகுதி பெறுவதற்கு உரியது என்பது நேர்மையான மதியுடையார் முடிபாம். இங்ஙனமாக, இக் காலத்தில் எல்லாப் பிறப்புக்களிலும் தலைசிறந்ததாகக் கருதப் பெறும் மக்கள் வாழ்க்கையில் நேர்மை காணப்பெறுகிறதா என ஆராய்ந்தால் ஒரு சிறிதும் இல்லை என்பதே வெளிப்படும் உண்மையாம். மிகுதியுரிமை இல்லை யென்றாலும் ஒத்த உரிமை யாவது பெண் ஆணைப்போல உடையதா? இல்லையே. ஆண், தனது உடல்வலிமையால், பல மறுபிறப்புக்களெடுத்து மெலிந்து தளரும் பெண்ணை அடக்கியாள்கின்றது. பொருளுரிமை முதலிய பலவகை உரிமைகளும் பெண்கள் பெறுவதில்லை. ஆணாவது பெண்ணாவது பிறக்கும்போது ஏதேனும் கொண்டுவந்ததுண்டா? அன்றி இறக்கும்போதாவது சுமந்து போவதுண்டா? பின் என் ஆண்மட்டும் முன்னோர் தேடிய முதலைப்பெறவும் பெண் ஆணின் கைபார்த்து அலமரவும் வேண்டும்?

ஆண்மகனொருவன் தன் மனைவியொருத்தி இருக்கவும்

வேறு பல பெண்களை மணந்து அவர்களைத் துன்புறச் செய்வது நேர்மையாகுமா? தன் மனைவி வேறொரு ஆண்மகனை ஏறெடுத்துப் பார்க்கவும் பேசவும் இசையாத ஆண்மகன் பல மகளிரை மணத்தல் அறிவுடைமையா? உணர்ச்சி ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுத்தானே? மேலும் கிழவனொருவன் இளம் பெண்ணொருத்தியை மணக்கத் துணியும்போது அவள் மனம் தன்னிடத்துப் பொருந்துமா என்று ஆராயாதிருப்பது மதியிழந்த தன்மையே யல்லவா? "நினைத்துக் கொண்டாளாம் கிழவி வயது மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட" என்பது முதுமொழி. அவ்வாறு விரும்பும் கிழவியை மணக்கும் குமரன் எவனேனும் உளனோ? பச்சிளங்குழவியைப் படுகிழவன் மணப்பதும், கட்டழகியாகிய தனது மனைவியிருக்கவும் வேறு பெண்களை மணப்பதும், மனைவியிழந்தபின் வேறொருத்தியை மணக்கத்தேடுறும் ஆண் கணவனையிழந்த காரிகையை மறுமணம்புகுத்தாது தடைபுரிவதுமாகிய தீய பழக்கங்கள் ஒழிதல் வேண்டும். ஓங்கிய அறிவுடையார் நேரிய ஒழுக்கமுறையை நிலைபெறுத்த முன்வரல் வேண்டும்.

ஆண்மக்கள் பெண்மக்களை அமுக்கி நசுக்கி அழிக்கும் அறக்கொடுஞ் செயலை ஒழிப்பதற்கு ஏற்ற மருந்தொன்றிருக்கிறது. அது காதல் மணவினையே. தமிழ்மக்களிடைக் காதல் மணவினையாகிய கருந்தனம் சிறந்தோங்கியிருந்த பண்டைக் காலத்திலே கணவனும் மனைவியும் ஒருயிரும் ஈருடலும்போல உளமொருப்பட்ட வாழ்க்கையுடையவராக இருந்தனர். ஒருவன் பல பெண்களை மணப்பதும் கிழவன் சிறுமியைக் கைப்பற்றுவது மாகிய சிறுமைகள் தமிழ்மக்கள் மனத்திற் புகுந்ததே கிடையா. உணர்ச்சி ஒன்றுபட்ட இடத்தில் பிளவென்பது எங்ஙனம் தோன்றும்?

கணவன் தன் மனைவியைத் தன் உயிர்போல எண்ணிப் பேணுவான். மனைவி தன்கணவனை தான் தொழும் தெய்வமாக நினைந்து வழிபடுவாள். ஆண் பெண் என்ற இருபாலாரும் கற்புடையவரா யிருந்தனர். "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை". மனைவி சொல்லைக் கணவன் தட்டமாட்டான்; கண

வன் ஆணையை மனைவி மறுக்கமாட்டாள். கணவன் தான் கொண்டொழுகும் சமயத்தில் தன்மனைவியும் புகுதல் இன்றி யமையாததென எண்ணுமல் அப்பெண்மணி தன் அறிவிற் கேற்றதெனக் கொள்ளும் சமயத்திலேயே இருக்கவும் இடந் தந்தானென்றால் வேறு விளம்புவதென்? இதற்குச் சான்ருக ஓர் மெய்வரலாற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவோம்.

"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்" எனச் சேக்கிழாரடிகள் போற்றிப் புகழும் பாண்டிமாதேவியார் தமது கணவராகிய கூன்பாண்டியர் சமண சமயம் புகுந்த பின்னரும் தாம் சைவராகவே இருந்தார். அவ்வாறு அவ்வம்மையார் சைவராக இருப்பதற்கும் மதுரைச் சொக்க நாதரை நாடோறும் சென்று வழிபடுவதற்கும் பாண்டிய மன்னர் இடம் தந்தார். அம்மையாரோடு அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவராகவே வாழ்ந்தார். இந்த இடத்தில் சேக்கிழாரடிகள்,

"ஆங்கவர் தாங்களங்க ணரும்பெறற் றமிழ்நாடுற்ற
தீங்கினுக் களவுதேற்ருச் சிந்தையிற் பிரிவுகொண்டே
ஓங்கிய சைவவாய்மை ஒழுக்கத்தி னின்றதன்மை
பூங்கழற் செழியன்முன்பு புலப்படா வகைகொண்டுய்த்தார்"

என அருளிச் செய்கின்றனர். இதனுல் மாதேவியாரும் அமைச்சரும் மன்னவருக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகச் சைவ சமயத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது கருத்தன்று. சைவசமய ஒழுக்கத்தினின்ற தன்மையைப் புலப்படுத்தும் குறிகளாகிய திருநீற்றையும் கண்மணியையும் அரசன் முன்பு அவர்கள் அணியாதிருந்தனர் என்பதே இதன் பொருளாம். ஏனென்றுல் சமணர்கள் புறச்சமயத்தாரைக் காண்டலும் முட்டு, அவர் வரவைக் கேட்டலும் முட்டு என எண்ணும் கொடுந்தன்மையராயிருந்தனர். அதனுல் சமண சமயம் புகுந்த வேந்தருக்குச் சைவசமயக் குறிகளைக் காண்பது வெறுப்பைத் தந்து உளத்தைப் புண்படுத்தும். உள்ளே மெய்யன்பும் உண்மையொழுக்கமுந்தான் வீடுபேற்றுக்கு வேண்டப்படுவனவே யொழிய புறத்தே காணப்பெறும் குறிகள் அல்ல என்பதை யுணர்ந்த மெய்யடியவராகிய பாண்டிமாதேவியார் தமது

கணவர் முன்பு அடையாளங்களை அணியாதவரா யிருந்த தொடு கோவிலுக்குப் போய் அழகமர் கடவுளை வழிபடும் போதெல்லாம் அவருடைய ஆணை பெற்றே சென்றாரென்பது தெரியவருகிறது. திருஞானசம்பந்தரது வருகையை யறிந்து எதிர்கொள்ள அம்மையார் சென்றனர் என்று கூறுமிடத்துச் சேக்கிழா ரடிகள்,

"அம்புய மலராள்போல்வார் ஆலவா யமர்ந்தார்தம்மைக்
கும்பிட வேண்டுமென்று கொற்றவன் றனக்குங்கூறி
தம்பரி சனங்கள்சூழத் தனித்தடை யோடுஞ்சென்று
நம்பரை வணங்கித்தாமும் நல்வர வேற்றுநின்றார்."

என மொழிந்தருளுகிறார். அம்மையார் திருஞானசம்பந்தர் வருகையைக் கணவரிடம் கூறவில்லை. ஏனெனில் அவர் தமது கணவனுருக்குக் கேட்டு முட்டுத் துன்பம் வராமை கருதி யிருத்தல் வேண்டும்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்." (திருக்குறள்)

உலகெங்கும் ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையுடன் வாழும் காலம் விரைவில் வருவதாக.

---

# நையாண்டி

[திரு. கபசம் எழுதியது]

ஆண்டிகளிற் பஞ்சத்து ஆண்டியுமுண்டு, பரம்பரை ஆண்டியுமுண்டு; பொய்யாண்டியுமுண்டு, மெய்யாண்டியுமுண்டு. ஆனால் நானோ நையாண்டி. வயிற்றுப் பிழைப்புக்காக வேஷம் போட்டுக் கையேந்திப் பல்லைக் காட்டுவது என்னுடைய வழக்கமன்று. கைப்பொருளில்லாததினால் இரந்துண்டு பிழைக்கிறவர்களை ஆண்டிகளென்று அழைக்கிறார்கள். மெய்ப்பொருளை நான் அறியாதவனாகையால் நானும் ஆண்டிதான். இதன் பொருட்டு நானும் ஒரு ஆண்டியாகத் திரிந்துவருகிறேன். இந்த

உண்மையை அறியாத பலர் என்னை ஒரு பிச்சைக்காரனாகவே நினைத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் எனக்கு ஒரு நஷ்டமுமில்லை.

ஒருநாள் சென்னைக் கடற்கரையில் நாலைந்துபேர் ஒன்றாக உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் "நான் நாளைக்குப் பூனாவிற்குப் போகிறேன்" என்றார். உடனே மற்றொருவர், 'பூனாவைப்பற்றிப் பல தடவைகளில் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது எங்கிருக்கிறதென்று எனக்குத் தெரியாது' என்று சொன்னார். இந்த சந்தர்ப்பத்தில் நான் அவர்களை அணுகி, "பூனா எங்கே யிருக்கிறதென்பதை முதல் வகுப்பில் படிக்கிற சிறு பிள்ளைகளும் அறிவார்கள்; உமக்கு இது தெரியாமல் போனதென்ன?" என்றேன். அவர்களெல்லோரும் சிறிது கோபத்துடன் என்னை உற்று நோக்கினார்கள். சிறிது நேரம் கழித்து அவர்களிலொருவன், "இவர் ரொம்ப படிச்சவர்போ லிருக்கிறது" என்று இகழ்ச்சியுடன் சொன்னான். அப்போது நான் "படிச்சவர் என்பதும் நீங்கள் குட்டிச்சுவர் என்பதும் இப்போது வெளியாகப் போகிறது" என்றேன். அவர்கள் மிகவும் சினமடைந்து "இவன் கர்வத்தை என்னவென்று சொல்வது?" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டனர். அவர்களுடைய பேச்சை நான் கொஞ்சமும் கவனியாமல் "இந்துஸ்தானியில் சுவர் என்றால் பன்றி என்று அர்த்தம். குட்டிச்சுவர் என்றால் பன்றிக் குட்டி என்று பொருள்" என்று கூறினேன். அவர்கள் என்னைப் பார்த்து "கஷ்டப்பட்டு சம்பாதிச்சித் தின்னுகிறவனானால் அவனோடு பேசலாம். சம்பாதிச்சித் தின்ன சாமர்த்தியம் இல்லாதவனோடு என்னத்தைச் சொல்வது?" என்று தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொண்டார்கள். உடனே நான், "நான் சம்பா அரிசிதான் சாப்பிடுகிறேன். நீங்கள் என்ன அரிசி சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டேன். "இது என்னடா தொல்லையாய்ப் போச்சுது! அப்பா நீ ஒழிஞ்சிப் போ, உனக்கு ஒரு சலாம்" என்று அவர்களிலொருவன் என்னை வேண்டிக்கொண்டான். இந்த வேளையில் நான் சிறிது உள்ளே

நகைத்துக்கொண்டு "அப்பா, சலாம்; இன்னும் கொஞ்சம் பேசலாம்" என்று சிரித்தேன். அவர்களும் என்னோடு சேர்ந்து சிரித்துவிட்டார்கள். இதற்குமேல் நான் அவர்களைப் பார்த்து "நண்பர்களே உங்களில் ஒருவருக்குப் பூனா எங்கிருக்கிற தென்று தெரியவில்லை. அதைச் சொல்லிவிட்டுப் போகிறேன். உங்களில் யாருக்காவது பானா, பாவன்னா, பீனா, சொல்லத்தெரியுமா?" என்று வினவினேன். அப்போது ஒருவர் "அது கூடவா தெரியாது, பானா, பாவன்னா, பீனா, பீயன்னா, பூனா, பூவன்னா" என்று மேலே சொல்லப்போகும்போது, "போதும், போதும், நிறுத்தும்" என்று நான் தடுத்தேன். அவர் அப்படியே நிறுத்திவிட்டார்.

"பீயன்னாவுக்குப் பக்கத்தில் பூனா இருக்கிறது உங்களுக்குத் தெரியாமல் போனதென்ன?" என்று நான் கேட்டபோது, அவர்களெல்லாம் விழுந்து விழுந்து சிரித்து என்னைத் தங்களருகில் உட்கார்ந்து பேசும்படிக் கேட்டுக் கொண்டார்கள். இதற்கிடையே ஒருவன் "சுடச் சுடக் காராமணி, ஐயையோ சுடுதே, அப்பப்பா சுடுதே, காராமணி, கடலை பட்டாணி" என்று கூவிக்கொண்டு வந்தான். நான் என்முன் இருந்தவர்களைப் பார்த்து, "எனக்குக் கொஞ்சம் கடலை வாங்கிக் கொடுப்பீர்களானால், சிறிது நேரம் உங்களோடே பேசுவேன்" என்றேன். "போயும் போயும் கடலைதானா உமக்கு வேண்டும்?" என்றார்கள்.

"கடலை என்ன அற்பமானதா? அகஸ்திய ரிஷி முதலியவர்களெல்லாம் கடலை சாப்பிட்டிருக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியுமா?" என்று பதில் கேள்வி கேட்டேன்.

"அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாக நாங்கள் கேட்டதுமில்லை, படித்ததுமில்லை" என்று அவர்கள் விளம்பினார்கள்.

"அப்படியானால் நான் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று நான் பேசத் தொடங்கினேன். "எலிமீது ஏறிய யானைக்கும் மயில்மேல் குந்திய காளைக்கும் தந்தையாகி" என்று நான் சொல்லிக்கொண்டு போகையில், "எலியின் பேரில் யானை எப்படி ஏறும்?" என்று ஒருவர் கேட்டார்.

"எலியில் பெருஞ்சாதி பெருச்சாளி; அந்த பெருச்சாளி மீது ஏறிய யானை, விநாயகர், மயிலின்மேல் குந்திய காளை, முருகன்" என்று விடையளித்தேன்.

"ஒஹோ அப்படியா? சரிதான் அப்புறம் சொல்லுங்கள்" என்று அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

நான் மறுபடியுந் தொடங்கினேன்:—

"எலிமீது ஏறிய யானைக்கும், மயில்மேல் அமர்ந்த காளைக்குந் தந்தையாகி, எருமைக் கடாவின்பேரில் ஏறி மார்க்கண்டன் உயிரைக் கவர்ந்த யமனை, எருதின்மேல் சவாரி செய்து போய்த் தாக்கிய பரமசிவன், பருவத ராஜன் பெற்றெடுத்த புத்திரியாகிய பார்வதியைக் கலியாணம் செய்துகொண்ட காலத்திலே தேவரும் மற்றை யாவரும், கைலையங்கிரியிலே அவருடைய மணக்கோலத்தைக் காண வந்ததனால், பாரந்தாங்கமாட்டாமல், வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்ந்துபோக, எல்லோரும் அதைக்கண்டு திடுக்கிட்டுப் போனார்கள்" என்று ஆனந்த பைரவி ராகத்திலே சொல்லிக்கொண்டு வந்தபொழுது, கராரா மணி கடலை பட்டாணி விற்றவன் தன் தலையிலிருந்த கூடையை இறக்கிக் கீழே வைத்து அதிக ஆவலுடன் நான் கூறியதைக் கேட்டுக்கொண்டு நின்றான்.

அவனை நான் பார்த்து, "அப்பா, கடலை விற்கும் கடலையாண்டி, அகஸ்தியர் கடலையைச் சாப்பிட்ட கதையைச்சொல்ல போகிறேன், நீயும் உட்கார்ந்து கேள்" என்று சொல்லி மறுபடியும் ஆரம்பித்தேன். "வண்டி குடை கவிழ்ந்ததுபோல் உலகம் ஒரு புறம் சாய்ந்து கிடந்ததைக் கண்டு எல்லோரும் நடுங்கி நிற்கும்போது, நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணின் உஷ்ணம் அதிகரிக்காதபடி தலையிலுள்ள சடையிலே கங்கை நீரைக் கட்டிவைத்திருக்கும் சாம்பசிவன் அதன் அருகிலுள்ள குள்ளமுனியாகிய அகஸ்தியரைப் பார்த்து "நீ போய் உலகத்தை முன்போல சமநிலைப்படுத்து" என்று ஆக்ஞாபித்தார். அவ்வாறே இந்த அகஸ்தியமுனி தென்றிசைச் சென்று உலகத்தைச் செப்பனிட்டார். இவ்வாறு மகத்துவம் மிகுந்த அகஸ்

தியரிடத்தில் ஒரு நாள் "ஆயிரங்கண்ணனாகிய தேவேந்திரன் வந்து தேவர்களெல்லாரையும் விருத்திராசுரன் என்ற ஒரு அரக்கன் வருத்துவதாயும், அவ்வரக்கன் சமுத்திரத்தில் ஒளித்துக்கொண் டிருப்பதாயும் முறையிட்டான். உடனே குறுமுனியாகிய அகஸ்தியர் சமுத்திரத்தைச் சாப்பிட்டு அந்த அசுரனை வெளிப்படுத்தினார். கேட்டீர்களா, ஓ ஜனங்களே" என்று நான் பேசி முடித்தேன்.

இதைக்கேட்டவர்கள் சிறிது நேரம் யோசனை செய்து "அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாகச் சொன்னீர்களே, அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் வேறு என்னமோ பேசிவிட்டீர்களே" என்றார்கள்.

"அதைப்பற்றித்தான் இப்போது நான் பேசி முடித்தேன்" என்று சொன்னேன்.

"இல்லையே" என்றார்கள்.

"ஆம்" என்றேன்.

"இல்லவே இல்லை" என்றனர்.

"சமுத்திரம் என்றால் என்ன?" என்று கேட்டேன்.

"சமுத்திரம் என்றால் கடல்" என்றார்கள்.

"கடலை அகஸ்தியர் சாப்பிட்டார் என்று நான் சொன்னேன். அவர் கடலையுண்டதை நான் சொல்லவில்லையென்று எப்படி நீங்கள் சொல்லலாம்" என்று நான் கேட்டபோது அவர்கள் வாயைத்திறந்து மூக்கில் விரல் வைத்துக் கொண்டனர்.

இதற்குப்பின் நாங்கள் இரண்டணாவிற்குக் கடலை வாங்கி உண்டோம். என்முன் இருந்தவர்கள் கையில் கடலையை வாங்கி உண்ணும்போது அஜாக்கிரதையாகப் பல கடலைகளைக் கீழே சிந்தினார்கள். நான் அதிக கவனத்துடன், ஒன்றுவிடாமல் பொறுக்கலானேன். உடனே அவர்கள் என்னைப்பார்த்து, "வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் கடலை வாங்கிக் கொள்ளலாம்; மணலில் விழுந்ததை ஏன் பொறுக்குகிறீர்கள்?" என்றார்கள்.

"அப்படிச் சொல்ல வேண்டாம், நண்பர்களே, நான் பெரியவன், நீங்கள் கொஞ்சம் சிறியவர்கள், "சிறியோர் சிந்திய சிறு கடலை எல்லாம், பெரியோராயிற் பொறுக்குவது கடனே" என்று நூல்களிற் சொல்லியிருப்பதை நீங்கள் வாசித்ததில்லையோ ?" என்று கேட்டேன். அவர்களுக்கு அடக்கமுடியாத நகைப்பு வந்தது. இதற்குள் நேரமாய் விட்டதால் நாங்கள் அவ்விடத்தை விட்டு எழுந்து அவரவர் இடம் போய்ச் சேர்ந்தோம். —தமிழ் நாடு.

---

# ஆய்ச்சியர் குரவை

[திரு. அ. நடராஜ பிள்ளை அவர்கள்]

(ஒன்பதாஞ் சிலம்பு ௩௨-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வேழு நரம்புகளும் நிற்குமிடங்களில், கண்ணன் முதலியோர் அக்காலத்தில் நின்று குரவையாடிய முறைப்படியே மாதரி அவ்வெழு கன்னியரையும் குடதிசை முதல் இடமுறையாகக் குரல் முதலிய நரம்புகளின் இடங்களில் நிறுத்தினள். குரல் நரம்பிடத்து நின்றவட்கு 'மாயவன்' எனவும், துத்த நரம்பிடத்து நின்றவட்கு 'பிஞ்ஞை' எனவும், கைக்கிளை நரம்பிடத்து நின்றவட்கு 'ருக்மணி' எனவும், உழை நரம்பிடத்து நின்றவட்கு 'வாருணி' எனவும், இளி நரம்பிடத்து நின்றவட்கு 'வெள்ளைய (பலராம)ன்' எனவும், விளரி நரம்பிடத்து நின்றவட்கு 'இரேவதி' எனவும், தார நரம்பிடத்து நின்றவட்கு 'அசோதை' எனவும் அவள் பெயரிட்டாள்.

பின்னர், மாதரி மாயவன் பெயர் கொண்ட மங்கையின் கழுத்தில் துழாய் மாலையை யிட்டு, மாயவன் தன் திருவினையும் மறக்கும்படி செவ்வி வாய்ந்த பிஞ்ஞையின் மேன்மையைப் பெரிதும் வியந்து நின்றாள். அவ்வெழு கன்னியரும் அவ்வட்டப் பாலையில் முன்னர்க் கூறிய முறைப்படியே சமநிலையாக நின்று, தம்முள் கற்கடகக்கை (நடுவிரலினையும் அணிவிரலினையும் முடக்கி மற்றை யிருவிரல்களாகிய சுட்டு விரலினையும் சிறு விரலினையும்) கோத்து மண்டலித்துச் சூழ்ந்தனர். அர்வ

களுள், குரல் நரம்பிடத்து நின்ற மாயவனாகிய கன்னி தன் கிளையாகிய துத்த நரம்பிடத்திலுள்ள பிஞ்ஞையை நோக்கி, "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தானாகிய கண்ணனை முல் லைத் தீம்பண்ணால் பாடியாடக் கடவோம்," என்றாள். எனவே மற்றவர்கள் அதற்கிசைந்தனர். உடனே, குரல் நரம்பாய 'மாயவன்' என்பாள் மந்த சுரமாகவும், இளி நரம்பாய 'வெள், ளையன்' என்பாள் சமசுரமாகவும், துத்த நரம்பாய 'பிஞ்ஞை' என்பாள் வலிசுரமாகவும், விளரி நரம்பாய 'இரேவதி' என் பாள் வலிமை யில்லாத மந்த சுரமாகவும், துத்த நரம்பாய பிஞ்ஞைக்குப் பற்றாகப் பின்வரும் பாட்டுக்களைப் பாடி எழு வரும் அடிபெயர்த்திட் டாடினார்கள் :—

ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிவந்த அகவற்றாழிசை.

௧. "கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ !"

௨. "பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ !"

௩. "கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ !"

பின்பு, குரவையாடு கோதையர், "தொழுனைத் துறைவ னாகிய கண்ணபிரானோடு பிஞ்ஞைப் பிராட்டியார் யமுனை யாற் றில் ஆடுங்கால் நிகழ்ந்த காட்சியினை யெடுத்து நாம் பாடு வோம்," என்று கூறிக் கொண்டு பின்வருமாறு பாடியாடத் தொடங்கினார்கள் :—

கலித்தாழிசைகள்.

௧. "இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்!
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம் !"

௨. "வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம் !
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம் !"

ரு. "தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாம்!
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்!"

இவ்வாடல் பாடல்களைக் கண்டு களித்த மாதரி, "பகற் கதிரைத் தன் கையாழியான் மறைத்த கடல்வண்ணனாகிய கண்ணனுக்கு இடது புறத்திலும், மதியை யொத்த மாமேனி கொண்ட வெள்ளையனுக்கு வலது புறத்திலும் ஆக, நின்று சிறு புறமாகிய வெருத்தத்தைக் கோட்டிக் குரவையாடும் பிஞ்ஞைப் பிராட்டியின் தாள வொற்றறுப்பைத் தாங்கி யாழ் நரம்பினை யுருவி நாரதனார் வாசிக்க, மாயவன் தன் முன்னவனாகிய வெள்ளையனோடும், பிஞ்ஞை முதலிய பெண்களோடும் துவாராபதியில், எருமன்றத்தே அன்றாடிய குரவைக் கூத்தினைக் கண்கூடாக்கும் இக்கூத்து, எத்தகைச் திறப்புடையதாய்த் திகழ்கின்றது!" என வியந்தாள். மேலுமவள் அக்கன்னியரை நோக்கி, "தோழிகாள்! நாமெல்லோருஞ் சேர்ந்து கருடப் புள்ளை யூர்கின்ற கடல்வண்ணனை யுள்வரிப் பாட்டினு ளுளமகிழ்ந் தேத்துவோம்," என்று கூறி அவர்களோடு தானுந் தன் மகளாகிய ஐயையும் கலந்து பாடத் தொடங்கினார்கள்:—

## கலித்தாழிசைகள்.

### பூவை நிலை.

க. "கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்."

உ. "பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்."

ங. "முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிறோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்."

### முன்னிலைப்பரவல்.

க. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன்! பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே

கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய்! மாயமோ! மருட்கைத்தே!"

உ. "அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே!
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய்! மாயமோ! மருட்கைத்தே!"

ந. "திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே!
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ! மருட்கைத்தே!

படர்க்கைப் பரவல்

க. "மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!"

உ. "பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே!"

ந. "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா லாற்றிசையும் போறறத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்னா நாவென்ன நாவே!" (தொடரும்)

## பெரியார் பிரிவு

திருவனந்தபுரத்தில் செந்தமிழ்க் கல்லூரி நடாத்துபவரும் பரோபகார சிந்தையுடையவருமான உண்டியல் கடை சு. கணபதியப்பபிள்ளையவர்கள் 12-2-31-ல் திடுமென உயிர் துறந்தமை கேட்டு பெரிதும் உளம் வருந்துகின்றோம். அவர்கள் குடும்பத்தவர்க்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார்.



தருமிக்கிப் பொற்கிழி யளித்தது.